

உ
சிவமயம்
அருள் ஒளி
வெளியீடு
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
இலங்கை.
கார்த்திகை மாத இதழ்
மலர் 40

தவத்திரு

# சாந்தலிங்க இராமசாமி அடிகள் முத்துவிழா



## பேரூர் ஆதீன முதல்வர்

ஐயனே சாந்த லிங்க வடிகளே அகவை இந்நாள்
செய்யசீர் எண்ப தாமோ செங்கதிர் முதுமை என்றும்
எய்துமோ இணையிற் பேரூர் இறைவனின் அருளாற் சைவப்
பொய்யிலா நெறியைப் போற்றிப் புகழுடன் பொலிந்து வாழி!

நாவலர் பெருமான் போல நற்றமிழ் சைவம் தம்மை
ஆவியின் மேலாய்ப் பேணி யரும்பணி நாளு மாற்றி
பூவிரி பொழிலைப் போல விரண்டையும் பொலியச் செய்யுஞ்
சேவையில் நிற்கும் நின்னைத் தெய்வமென் போமே வாழி!

வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் விளங்கப் பேரூர்
ஆதீனம் அமைத்து வையம் அமைதியுற் றோங்கும்வாழ்வுக் (கு)
ஆதார மான வான்ற தொண்டுகள் ஆற்றும் நின்றன்
பாதார விந்தம் போற்றிப் பணிந்தனம் பரந்து வாழி!

வாழிய பேரூர் மேவும் மதியுறு சடையார் வாழி
வாழிய பேரு ராதீ னந்தழைத் தோங்கி வாழி
வாழிய முதல்வர் சாந்த லிங்கனார் நீடு வாழி
வாழிய சைவ நீதி வையகம் எல்லாம் வாழி!

பாடல்: கவிஞர் கந்தவனம்




# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2005 பார்த்திப வருடம் கார்த்திகை மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மலர் 40

தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல. QD/74/NEWS/2005


## சிவதீட்சை மரபு பேணுவோம்

சைவ சமயத்தவர்கள் தங்கள் சமயச்சின்னங்களுக்குரிய மகிமையைப் பேண வேண்டும். பொதுவாக ஒவ்வொரு மதத்தவர்களுக்கும் புறச் சின்னங்களுண்டு. கிறிஸ்தவர்களெல்லோரும் சிலுவையைத் தங்கள் மதத்தின் புறச்சின்னமாகக் கொண்டிருக்கின்றனர். முஸ்லீம்களனைவரும் பிறையையும், நட்சத்திரத்தையும் தங்கள் மதத்தின் சின்னங்களாகக் கொண்டிருக்கின்றனர். இந்து மதத்தவர்களின் சின்னங்களே எண்ணிக்கையிலடங்காதவைகள். எனினும் சைவசமயத்தவன் அணியும் விபூதியும் உருத்திராட்சமும் அவனை அடையாளம் காட்டும். நெற்றியில் நாமமும் கழுத்தில் துளசி மாலையும் வைணவரை அடையாளம் காட்டும். மானுட உடல் வெந்து இறுதியில் சாம்பலாகி விடும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது திருநீறு. விட்டு விடப் போகுது உயிர் விட்ட உடன் சுட்டு விடப் போகிறார் சுற்றத்தார் என்ற உண்மையின் தத்துவப்பொருள் நீறு. உலகின் விடிவுப்பொருள் நீறு என்ற உண்மையை நாம் உணரவேண்டும். நிலையானது நிட்சயமானது முடிவானது எதுவோ அதுவே இறைவன். அவனே சிவன் என்ற அடிப்படையே சைவத்தின் மேன்மைக் கொள்கையாகும். சைவ சமயத்தவர்கள் வழிபாட்டு மரபில் சிவதீட்சை பெறும் வழக்கம் பண்டுதொட்டு நிலவுகிறது. தீட்சை ஞானத்துக்கு வழிகாட்டுவது. ஆன்மாவை பக்குவப்படுத்துவது தீட்சை. அடியவர்களின் பக்குவநிலைக்கு ஏற்ப தீட்சை வழங்கப்படுவது வழக்கம். சாதாரணதீட்சை, விசேடதீட்சை, பரிசதீட்சை, நயனதீட்சை, மானதீட்சை, வாசகதீட்சை, ரௌவுத்திரி தீட்சை எனப் பல தீட்சைகள் குருவால் வழக்கப்படும் மரபுண்டு. எனினும் ஒவ்வொரு சைவசமயத்தவனும் ஐந்து வயது நிரம்பியதும் சாதாரண தீட்சையைப் பெற்று வாழ்நாள் முழுவதும் அதன் வழி இறைநாமத்தை உச்சரிக்கும் வழக்கம் சைவர்களின் சீரிய நெறியாகும். இன்று சிவதீட்சை பெறும் வழக்கம் அருகி வருகிறது. இது அபாயகரமானது தமது சமய உண்மையை தாம் உணராது தாம் சைவசமயத்தவர் எனக்கொள்ளல் அர்த்தமற்றது. ஐப்பசி மாதத்தில் சைவர்கள் சிவதீட்சை பெறுவது வழக்கம். இன்று தீட்சை வழங்குவதில் பெறுவதில் நாம் பொறுப்பற்றவர்களாக இருக்கிறோம். நீறில்லா நெற்றி பாழ் என்று அஞ்சி

முப்போதும் நீறு பூசியவர்களாக வாழ்ந்தவர்கள் எம் முன்னோர். இன்று கோவில்களை நிர்வகிக்கும் தர்மபரிபாலகர்கள், சிவாச்சாரியர்கள், சைவ சமய நிறுவனங்கள் இவ்விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டும். நாகரீகமாக ஒரு விரலால் மட்டும் படாதபடி விபூதி தரிக்கும் அடியவர்களாக இன்றைய தலைமுறை நாளைய தலைமுறை ஒரு விரல் விபூதியை ஒரு துளியாக்குமோ? சிந்தியுங்கள். நோயை விரட்டும் மருந்து திருநீறு. நீறு பூசியவருடன் சிவன் நின்று காப்பான். மனிதன் பதினாறு இடங்களில் நீறு பூச விதி வைத்த சமயம் எங்கள் சமயம். திருநீற்றுப் பொலிவு எல்லோர் தேகத்திலும் மிளிரும் போது திருநிறைந்த வாழ்வு மலக்கும். நாடு திருநாடாகும். திருநீறு அணியும் போதெல்லாம் சிவாயநம என்போம். அபாயம் ஒரு நாளும் நம்மை அணுகாது.

**ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகியறிவழிந்து**
**மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்**
**செய்யுந் திருவெற்றி யூருடையீர் திருநீறு மிட்டுக்**
**கையுந் தொழப் பண்ணியைந்தெழுத் தோதவுங் கற்பியுமே.**

**- பட்டினத்தார்**

என்ற அரும் பாடல் அற்புதமானது. வாழ்வில் மெய்யையும் பொய்யையும் அறிந்து மேன்மையுடன் வாழ தீட்சை பெற்று நீறணிந்து வாழ்வோமாக. **- ஆசிரியர்**

# அருள் விருந்து

அறமும் அறக்கடவுளும் ஒன்றே
இனிமை இறைமையின் அறிகுறியாம்
மனிதனுக்கு நல்லறிவு புகட்ட வல்லது துன்பம்
அருள்தாகம் கொண்டிருப்பவனுக்கு ஆரமுது கிட்டுகிறது
கசப்பதெல்லாம் கேடுடையதல்ல; இனிப்பதெல்லாம் நலமுடையதல்ல
நன்கு பாடுபடுபவனே நோயற்ற வாழ்வுக்குத் தகுதியுடையவன் ஆகிறான்
பிரார்த்தனையின் மூலம் மனிதன் தன்னைத் தெய்வத்தோடு இணைத்துக் கொள்கிறான்.
எது வினையாற்றுகிறதோ அது இயற்கை. எது வினையைக் கடந்து இருக்கிறதோ அது ஆத்மா.

உறுதியான நம்பிக்கை உயிரை ஓம்புகிறது. ஐயப்பாடோ அழிவை உண்டு பண்ணுகிறது.

நாளைக்குச் செய்வது என்பதை இன்றே செய். இன்றே செய்வது என்பதை இப்பொழுதே செய்.

தற்பெருமையும் பேராசையும் பிடித்திருப்பவனுக்குப் பதை பதைப்பும் அசாந்தியும் மிகவுண்டு.

பல தடவைகளில் உண்மை கசக்கிறது. பின்பு பொய்யோ தித்திக்கிறது. ஆனால் கசக்கும் உண்மையானது தித்திக்கும் பொய்யினும் பெரியது.
இவ்வுலகுக்குரிய பொருளோ பதவியோ வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணாதே ஞானமும் பக்தியும் வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணு.
சுவர்க்கமும் நரகமும் மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டவைகள் ஆதலால் ஒரு மனிதனுக்கு சுவர்க்கமாயிருப்பது மற்றொருவனுக்கு நரகமாகக் கூடும்.

[தர்மசக்கரம்; சக்கரம்-8; விகாரி ஆ புரட்டாதி மீ; ஆரம்-9; பக்கம்-322; அருள்விருந்து; 1959ஆம் ஆண்டு, ஆசிரியர்: சுவாமி சித்பவானந்தர்; ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்; ராமகிருஷ்ணமிஷன்) திருப்பராய்த்துறை போஸ்ட்; திருச்சி ஜில்லா.]

# சர்வாலய தீபமும், குமாராலய தீபமும்

கலாநிதி சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

"அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே" என்பது இன்று சிந்திக்கத்தக்கது. பஞ்ச பூதங்களில் அக்கினிக்கு சிறப்பு உண்டு. அதாவது கண்ணுக்குப் புலப்படுவதோடு ஒளி மயமாகவும் விளங்குவது இதுவாகும். நிலமும், நீரும் உருவம் உடையவை. எனினும் அத்துணை உயர்ந்த பொருள்களாக எண்ணப்படுவதில்லை. ஆகாயமும் வாயுவும் உருவம் அற்றவையாக இருப்பதோடு தொடர்பு கொள்ள முடியாத நிலையாகவும் விளங்குவன. ஆனால் அக்கினியோ இவற்றுக்கு நடுவில் அருவுருவப் பொருளாக விளங்குவது. இதனாலேயே, இறைவனை அழைத்துப் பாடியவர்கள் பல இடங்களில் ஒளியை இணைத்துப் பாடியுள்ளனர். "பொங்கழல் உருவன் பூத நாயகன்" என்கிறார் ஞானசம்பந்தர். இப்படி ஆயிரம் ஆயிரம் இடங்களை சுட்டிக் காட்டலாம். திருவண்ணாமலையில் சிவபெருமான் பிரம விட்டுணுக்களது போரினை ஒழித்தற் பொருட்டு நின்ற அக்கினித் தம்ப உருவம் அரும்பெரும் சோதியாய் காட்சி கொடுத்தது. கார்த்திகைத் திங்களில் பூரணை நன்நாளில் ஆலயங்கள் தோறும் வீடுகள் தோறும் ஒளி மயமாகக் காணப்படும். ஒவ்வொரு இல்லங்களிலும் நிலபுலங்களிலும் சந்திகள் சாவடிகளிலும் தீபங்களால் அலங்காரம் செய்யப்படும். இறைவனுக்கு ஆற்றும் வழிபாடுகளில் தீப் அலங்காரமே சிறப்பு வழிபாடாகும். விளக்கு இடுதல் என்பதே விளக்கீடு எனக் குறிப்பிடப்படுகிறது. "தையலார் கொண்டாடும் விளக்கீடு காணாது போதியோ பூம்பாவை" என்பது தேவாரமாகும். கார்த்திகைப் பூரணையில் நிகழும் தீபக் காட்சியை மக்கள் இறைவனது அருள் ஒளிக்காட்சியாக காண்கின்றனர். திருவண்ணாமலை அருட்காட்சியை ஒவ்வோர் ஆலயமும் நினைவூட்டிக் கொள்வதாக வைத்து "சொட்கடப்பனை" என்ற ஒன்று கொழுத்தி காட்டப்படுகிறது.

குமரன் என்பது முருகப்பெருமானைக் குறிப்பதாகும். அஞ்ஞானத்தைப் போக்குபவன் என்ற பொருளில் இது அமைந்துள்ளது. குமரன் ஆலயங்களில் எல்லாம் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரத்தில் குமாராலயதீபம் பெருவிழாவாக எடுக்கப்படுகிறது.

முருகப்பெருமானுக்குரிய மூன்று விரதங்களாவன, கார்த்திகை விரதம், வெள்ளிக்கிழமை விரதம், கந்தசஷ்டி விரதம் என்பனவாகும். கார்த்திகை என்பது இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒன்றாகும். கார்த்திகைப் பெண்கள் அறுவர் சரவணப் பொய்கையில் உதித்த முருகப்பெருமானை எடுத்து அணைத்துப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்தனர். சிவபரம் பொருளும் உமை அம்மையும் அங்கு சென்று ஆறுவேறு உருவில் அமைந்த முருகக் குழந்தையைக் கட்டியணைத்துக் "கந்தன்" என்ற நாமத்துடன் ஒருருவில் அமைய வைத்து ஆசீர்வதித்தனர். அப்பொழுது அங்கு காட்சி அளித்த கார்த்திகைப் பெண்களை நோக்கி எம்பெருமான் வரமளிக்கின்றார்.

பெண்களே நீங்கள் கந்தனைப் போற்றி வளர்த்தீர்கள். அதனால் இவன் உங்கள் மைந்தன் எனும் பெயரால் "கார்த்திகேயன் என்று அழைக்கப்படுவான்." எவராவது மனமகிழ்வோடு கார்த்திகை நட்சத்திரத்தில் இவனை வழிபாடு செய்வார்களானால் அவர்கள் குறைகள் நிறைவு செய்யப்பட்டு இம்மை, மறுமை, மோட்சம் அனைத்தையும் நல்குவோம்.

முருகனை வழிபட்டவர்க்கு அச்சம் இல்லை. பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திரண்ட தோளும் அச்சமகற்றும் அயில்வேலும் கொண்டு எழுந்தருளி அடியவர்களுக்கு முன்நின்று காக்கும் முழுமுதற் கடவுள் அவனுடைய வேலே துணை என்று நம்பி வாழ்வோருக்கு வினை இல்லை. காலனையும் ஆரடா என்று கேட்கும் உறுதி அவர்க்கு உண்டாகும். குமரா சரணம் என்று சொல்லிக் கும்பிடக் கிடைத்த இந்நாளில் மாவிளக்கு, நெய் விளக்கு ஏற்றி முருகனுக்கு சண்முக அர்ச்சனை நடாத்தி வழிபடுவோம். எனவே நினைக்க முத்தி தருவது அண்ணாமலை. அங்கு செல்ல இயலாதவர்கள் அண்ணாமலையை நினைந்து இந்நாளில் போற்றி உய்வடைவார்களாக.

❊❊❊ ❊❊❊ ❊❊❊

## நாவலரின் புகழ் மணக்கும் கார்த்திகைத் திங்கள்

கார்த்திகை மகமெனும் திருநாளாம்
கவின்தமிழ் சைவம் புகழ்நாளாம்
சீர்திகழ் நாவலர் அடிமலரை
சிந்தையால் வணங்கித் தொழும்தினமாம்

வாழையிலை யினில்உண வுண்டால்
வருமோர் தண்டனை யெனவஞ்சி
உழையா தொருபசு உணவினுக்கே
உடன்பெறும் கொடுமை சொல்தினமாம்

சைவம் என்பது கொலைவெறுக்கும்
சன்மார்க்க நெறியே எனப்பலர்க்கும்
மையல்கொள் மாட்சி தனைவிளக்கி
மகிமைசொல் நாவலர் திருநாளாம்

பாரதம் மீதிலும் இருளகற்றி
பைந்தமிழ் சைவநன் னெறிபரப்பி
கௌரவம் பேணுதல் கடனெனவே
கவின்பணி ஆற்றிய பெருமானாம்

கல்விக் கண்ணைத் திறந்திடிலே
கவினுறும் சைவம் தமிழெனவே
நல்வழி சிதம்பரம் யாழ்ப்பாணம்
தனில்கல்விக் கூடங்கள் திறந்தாராம்

பிச்சை புகினும் கற்கைநன்றே
பீடை இல்லை இல்லையென்றே
இச்சை கொண்டும் பிடியரிசி
சுமந்தே கற்றலை வளர்த்தாராம்

நூல்பல கல்லெனும் தேன்மொழியின்
சுவையறிந் தொழுகிடப் புவியினிலே
சொல்லும் தமிழும் இனித்திடவே
தூயசெந் தமிழ்நூல்கள் படைத்தவராம்

சிறுவர் அமுதம் பாலபாடம்
சிந்தைதொட் டொளிசைவ வினாவிடையும்
பெருமதி தருபுராண வசனநூல்கள்
பேணியே தந்தொளி செய்தாராம்

அருமை அருமை அருமையென
அகங்குளிர்ந் தொளிபெறும் வகையினிலே
கருத்தில் மிகுந்த சொல்லமுதம்
கவினுறத் தந்தொளி செய்தாராம்

ஈசன் அடிமலர் நாடியுமே
இருகரம் குவித்தல் சிறப்பெனவே
நேசன் வண்ணைப் பதியீசன்
திருவடி பணிந்துசொல் பொழிந்தாராம்

அன்றே ஈசன் கேத்சன்
அருளொளி தந்த இடம்காட்டி
நன்றே தேன்பொந் தொன்றுளது
என்றே எழுச்சி படைத்தாராம்

இன்றே இனிமை மிகுகண்டு
இதயத் தொளிகண் டுய்ந்திடவே
நன்றே செய்தார் நாவலர்தம்
திருவடி மலரினைப் பணிவோமே

கவி ஆக்கம்:
சு. குகதேவன்
தெல்லிப்பழை.

# ஆடும் பெருமான் அரங்குகள்

பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்

"எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும்
எய்துகபிறப்பில் இனிநான்
எய்தாமை எய்துகினும் எய்திடுக இருமையினும்
இன்பம்எய் தினும்எய்துக
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருகமிகு
வாழ்வுவந் திடினும்வருக
வறுமைவரு கினும்வருக மதிவரினும் வருகஅவ
மதிவரினும் வருகஉயர்வோ
டிழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருகஅல
தெதுபோ கினும்போகநின்
இணையடிகள் மறவாத மனம்ஒன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும் அரசே
கழிவகைப் பவரோக நீக்கும்நல் அருள்எனும்
கதிமருந் துதவுநிதியே
கனகஅம் பலநாத கருணையங் கணபோத
கமலகுஞ் சிதபாதனே" திருவருட்பா.

கோயில் என்ற சொல் பொதுவாக ஆலயங்களைக் குறிக்கினும், சைவ சமயத்தவர் சிறப்பாகக் கோயில் என்பது சிதம்பரத்தையே. மிகப் பழைய காலத்தில் இது தில்லை மரங்கள் நிறைந்த காடாய் இருந்தது. எனவே தில்லைவனம் என்ற திருப்பெயரும் இதற்குண்டு. வியாக்ரபாதர், பதஞ்சலி என்னும் இருவருந் தவஞ்செய்தனர். இங்கே இவ்வாலயத்தைக் கட்டி உருவாக்கியவன் இரணியவர்மன். இவ் வரலாறு சொல்லும் நூலுக்கும் கோயிற் புராணம் என்றே பெயர். இந்நூலைப் பாடியருளியவர் உமாபதி சிவம் இப்புனித தலத்தைப் பூவுலக கைலாயம் என்பர். தில்லைக்கோயிலிற் பொன்னம்பலத்துக்கு அருகே தென்புறத்தே கோவிந்தராசர் சந்நிதி அமைந்திருக்கிறது. இவ்வாலயம் மேட்டில் அமைந்திருப்பதால் சித்திரகூடம் என்றழைக்கப்படும். சித்திரகூடம் தெற்றி அம்பலம் எனத் திவாகரம் கூறும். இத்திருத்தலம் நூற்றெட்டு வைணவ திருப்பதிகளுள் ஒன்று. இவ்வாலயம், எட்டாம் நூற்றாண்டில் அரசாட்சி செய்த இரண்டாம் நந்திவர்ம பல்லவமன்னனாற் (கிரி 717-782) கட்டப்பட்டது. இப்புனித பதியை ஆழ்வார்திருமங்கை மன்னன் மங்களாசாசனம் செய்துள்ளார்.

"வெம்பும் சினத்துப் புனக்கேழ வொன்றாய்
வீரீர் முதுவெள்ள முன்புக் கழுந்த
வம்புண் பொழில்சூ ழுலகன் றெடுத்தான்
அடிப்போ தணைவான் விருப்போ டிருப்பீர்
பைம்பொன்னு முத்தும் மணியும் கொணர்ந்து
படைமன்ன வன்பல் லவர்கோன் பணிந்த
செம்பொன் மணிமடாடங் கள்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்திர கூடம் சென்றுசேர் மின்களே"

பெரிய திருமொழி 3: 2,3

இவ்வண்ணமே பெருமாள் திருமொழி பத்தில் இருந்தும் ஒரு திருமொழியை இங்கே தருகிறோம்.

**"குரைகடலை அடல்அம்பால் மறுகஎய்து**
**குலைகட்டி மறுகரையை அதனாலேறி**
**எரிநெடுவே லரக்கரொடு மிலங்கை வேந்தன்**
**இன்னுயிர்கொண் டவனதம்பிக் கரசுஈந்து**
**திருமகளோ டினிதமர்ந்த செல்வன் றன்னைத்**
**தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்**
**அரசமர்ந்தா னடிசூடு மரசையல்லால்**
**அரசாக எண்ணேன்மற் றரசுதானே"**

பெருமாள் திருமொழி 10.7

சைவசமயிகள் சிதம்பரத்தைக் கோயில் என்றழைப்பது போல, வைணவர்கள் ஸ்ரீரங்கத்தைக் கோயில் பெரியகோயிலென்று அழைப்பர். வடநாட்டுந் தென்னாடும் தொழ நின்ற ஸ்ரீரங்கம் என ஆழ்வார்கள் போற்றுவர். இ..து அவர்கட்குப் பூவுலக வைகுந்தம் ஆம். திருமாலையும், திருச்சிற்றம்பலம் உடையாரையும் கூத்தப்பிரான் சந்நிதிக்கு எதிரில் உள்ள ஒரு சதுரத்தில் நின்றால் ஒரே நேரத்திற் தரிசிக்கலாம். நடராஜனின் திருக்கோலம் ஐந்தொழிலையும் வெளிப்படுத்துவது போல, திருமால் திருக்கோலமும் ஐந்தொழிலைக் குறிக்கும். கோவிந்தராசன் ஏழுதலை நாகபாம்பின் படத்தின் கீழ் நான்கு திருக்கரங்களுடன் சங்குசக்கரந்தாங்கி மார்பில் இலட்சுமியுடனும், நாபியில் பிரம்மாவுடனும் சயனித்த நிலையிற் காட்சி தருகிறார். இது அவரது அயர்ந்த கோலமாகும். கூத்தப்பிரானதும் கோவிந்தனதும் காட்சியைக் கண்ட மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கோவையாரில் வெகு நாகரிகமாகப் பாடுகிறார்.

**"புரங்கடந்தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா**
**திரங்கிடெந்தா யென்றிரப்பத் தன்னீரடிக் கென்னிரண்டு**
**கரங்கள் தந்தா னொன்று காட்டிடமற்றாங் கதும் காட்டிடென்று**
**வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலம் மாயவனே"**

திருக்கோவையார்

முன்னொரு போது தாருகாவனத்தில் சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்தை மோகினி வடிவிற் சென்ற ஸ்ரீமந்நாராயணன் கண்டு புளங்காகிதம் அடைந்தார். இன்னொரு சந்தாப்பத்திற் பரம்பொருளின் திவ்விய திருவடிகளைப் பன்றி வடிவெடுத்துத் தேடியும் காணாமல் அபயம் புக்கார். இப்பொழுது தில்லையில் எடுத்த பொற் பாதத்தைக் கண்டு வியந்து, மற்றத் திருவடியையும் காட்டு என்று தன்கைகளை ஏந்தி வரம் கிடப்பதாகக் கூறும் இப்பாடலை நாம் எப்படி மறக்க முடியும். ஒரு நவீனத்துவம் இப்பாடலிற் சொட்டுகின்றது அல்லவா.

நடுநாடியாய்த் திகழும் சிதம்பரத்திலே ஐந்து சபைகள் உள்ளன. சபை, அரங்கு, மன்று, தெற்றி என்பன ஒரு பொருள் தரும் பதங்கள். தில்லையிற் அமைந்துள்ள 5 மன்றுகள்.

1. சித்சபை (சிற்சபை)
2. கனகசபை
3. தேவசபை
4. நிருத்தசபை
5. இராசசபை

**சித்சபை:** இங்கே நடராசப்பெருமான் நடனத்திருக்கோலத்தில் நின்று அருள்பாலிக்கிறார். உடுக்கிலே படைப்பு, நெருப்பிலே அழிப்பு, அபயகரத்திற் காப்பு தூக்கிய திருவடியில் அருள்பாலிப்பு, (முத்தி) ஊன்றியதிருவடியில் திரோதானம் (மறைப்பு) இதற்கு சிற்சபை சிற்றம்பலம், வடமொழியில் தப்ரசபா என்ற திருநாமங்களும் உண்டு. இச்சபையே திருச்சிற்றம்பலம் என அழைக்கப்படும். நாம் திருமுறை ஓதமுன்னும் ஓதி முடிந்த பின்னும் திருச்சிற்றம்பலம் எனக்கூறும் மரபு சிதம்பரமே மூத்த கோயில் என்பதை உணர்த்துகின்றது. நடராஜப் பிரபு பிரம்மாவின் தலைகளையே மாலையாக அணிந்திருக்கிறான். கூத்தனின் இடப்பாரிசத்தில் சிவகாமசுந்தரியும் வீற்றிருக்கிறாள். சிதம்பரத்தைப் புலியூர் என்றும் அழைப்பர். இங்கே அர்த்தசாமப் பூஜை முடிந்ததும் எல்லா ஆலயங்களிலுமுள்ள சிவகலைகள் எல்லாம் இத்தலத்திலுள்ள இலிங்கத்தில் ஒடுங்குவதால் இம்மூர்த்திக்குத் திருமூலட்டான நாதர் என்று பெயர் சிவபெருமானோடு தொடர்புடையன பஞ்சபூதத் தலங்கள். பஞ்சபூதங்களாவன நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன. பூமித்தலம் காஞ்சிபுரம், நீர்த்தலமாக விளங்குவது திருவானக்கா. நெருப்புத் தலமாக விளங்குவது திருவண்ணாமலை காளத்தியே காற்றுத் தலமாகப் பேசப்படுகிறது. ஆகாயத் தலமாக மிளிர்வது சிதம்பரமே. சிற்சபைக்குச் செல்ல ஐந்து படிகள் உள்ளன அவை பஞ்சாட்சரப் (ஐந்தெழுத்து மந்திரம்) படிகள் என அழைக்கப்படும். இப்படிகள் வெள்ளித் தகட்டாற் போர்த்தப்பட்டுள்ளன. கூத்தனுக்கு வலப்புறத்திற்றான் சிதம்பர இரகசியம் உள்ளது. இங்கே எவ்வித தெய்வத் திருமேனிகளும் இல்லை. இது ஒரு ஆகாயத்தலம் என்பதை விளக்க, ஆகாயத்திற் பலவில்வமாலைகள் தொங்கவிடப்பட்டுள்ளன. திரையை நீக்கித் தரிசிப்பதால் இது (ரஹஸ்யம்) இரகசியம் எனப்படுகிறது. (தரிசித்தால் முத்திதரும் தலம் சிதம்பரம்) இதற்கு வருடத்துக்கு ஒருதரம் புனுகுச்சட்டம் சாத்தப்படும். இரண்டுமுறை அபிடேகம் செய்யப்படும். இச்சிதம்பர ரகசியத்தைப் பற்றி தாயுமான சுவாமிகள் 33 பாடல்கள் பாடியுள்ளார். சிதம்பர ரகசிய வாயிலில் தொங்கும் திரையின் வெளிப்பக்கம் கறுப்பாகவும், உட்புறம் சிவப்பாகவும் அமைந்துள்ளது. மறைப்புச்சக்தியே அருட்சக்தியாக மாறி உபகரிக்கும் என்பதனை இது விளக்குகிறது.

"மாயை என்னும் திரையை நமக்கு முன்னே வைத்துக் கொண்டு", ஆனந்தம் எங்கே", என்று கபோதி போல் கேட்கிறோமே. அதற்காகவே" அஞ்ஞானம் என்ற திரையை விலக்கி பரவொளியைக் காட்டி அருவுருவாய் நிற்கும் ஈசனைக் காண்பாய்" என்ற தத்துவத்தை விளக்குவதற்காகவே சிதம்பர ரகசியம் சித்சபையில் எம்பெருமானுக்கு வலது புறத்தில் உள்ளது."

**சிதம்பரம் நடராசர் திருக்கோயில்:**

சித்சபையான பொன்னம்பலத்தில் இறைவன் சகளம் (உருவம்) நிஷ்களம் (அருவம்) சகள நிஷகளம் (அருவுருவம்) என்ற மூவிதத் தத்துவ விளக்கமாகக் காட்சி தருகிறார். நடராசர் திருமேனி சகளம், சிதம்பர ரகசியம் நிஷ்களம் ஸ்படிகலிங்கம் சகள நிஷ்களம் இவ்விலிங்கம் அழகிய சிற்றம்பலம் உடையார் எனவும், திருவம்பலமுடையார் எனவும் அழைக்கப்படும்.

**கனகசபை:** சித்சபைக்கு (சிற்றம்பலம்) எதிரில் உள்ளது கனகசபை (பொன்னம்பலம்) இக்கனகசபை சித்சபை அமைந்திருக்கும் கல்லால் ஆனபீடத்தின் மீதே அமைந்துள்ளது. இதன் எல்லாப் பக்கங்களிலும் மரக்கதவுகள் உண்டு. இவை பித்தளைத் தகட்டினால் மூடப்பட்டுள்ளன. இங்கேயமைந்த 18 தூண்களும் பதினெட்டுப் புராணங்களையும்

குறிக்கின்றன. இதன் சாளரங்கள் 96 இவை வெள்ளியாலியன்றன. இவை தொண்ணூற்றாறு தத்துவங்களைக் காட்டுகின்றன. ஆறு ஆதாரங்களில் இது மணிபூரகமாய் விளங்குகின்றது. இச்சபையில் நந்தியம் பெருமானைக் கும்பிட்ட பின்பே நடராசர் தரிசனம் செய்யலாம். கனகசபை, சித்சபை இரண்டும் இணைந்த ஆலயம் பொன்நிறம் பூசப்பட்ட செப்புத்தகடுகளால் வேயப்பட்டது. இவ்விரு மண்டபங்களும் கனகசபை அல்லது பொன்னம்பலம் எனப்பெயர் பெறும். அம்பலம்-வெளி முதலாம் ஆதித்தசோழன் (கி.பி.870-890) என்னும் மன்னனும் அவனுக்குப் பின் ஆட்சிபுரிந்த சோழர்களும் பாண்டியர்களும் இப்பொன்னம்பலக் கூரையைப் புதிப்பித்ததாக வரலாறு கூறுகிறது. இங்கேயுள்ள சந்திரமௌலீசருக்கு (ஸ்படிகலிங்கம்) தினமும் ஆறுகாலப் பூசையும், மாசி, சித்திரை, ஆவணி, புரட்டாதி, மாதங்களில் அபிடேகமும் நடைபெறும் இச்சபையில் காலைநேரம் சந்திரமௌலீஸ்வரருக்கும் இரத்தின சபாபதிக்கும் இரண்டாம் காலத்தில் அபிடேகம் நடைபெறும்.

**தேவசபை:** இதற்குப் பேரம்பலம் என்று பெயர். யாகசாலைக்கருகில் ஈசானமூலையில் இருப்பது தேசபை சம்பந்தர் சிற்றம்பலத்தையும் பேரம்பலத்தையும் போற்றிப் பாடியுள்ளார்.

**"மையாரொண்கண்ணார் மாடநெடுவீதிக்**
**கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்**
**பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்**
**செய்யா னுறைகோயில் சிற்றம்பலத்தானே"**

திருமுறை 1: 80,3

**"நிறைவெண் கொடிமாட நெற்றிநேர்திண்டப்**
**பிறைவந் திறைதாக்கும் பேரம்பலத்தில்லைச்**
**சிறைவண்டறையோவாச் சிற்றம்பலமேய**
**இறைவன் கழலேத்து மின்பமின்பமே"** மேலது 4

இவ்வம்பலம் விசாலமான சதுர வடிவானதென்று சொல்லப்படும். நாற்புறமும் சுவரால் அடைக்கப்பட்ட இத்தேவசபையில் உற்சவமூர்த்திகளும் பஞ்சமூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர். கலைத்துவம் நிறைந்த இம்மூர்த்தங்களில் உமையம்மை பிரதோஷ நாயகர், பார்வதி, பதஞ்சலி, சோமாஸ்கந்தர் என்னும் திருமேனிகள் அடங்குவர். சோமாஸ்கந்தருக்கு இடது புறத்தில் உமாதேவியார் தமது கால்கள் இடைப்பாகம், கரங்கள், கழுத்து, ஆகிய திருப்பகுதிகளில் ஆபரணம் அணிந்து, தலையில் மகுடம் தாங்கி, வலது காலைப் பீடத்தின் மீது மடக்கி வைத்து இடதுகாலை தொங்கவிட்டபடி அமர்ந்திருக்கிறார். சிவபெருமான் இடக்காலை மடக்கி வைத்துக் கொண்டு, வலது பாதத்தைத் தொங்க விட்டபடி இருக்கிறார். தாய் தந்தையர்க்கிடையில் கந்தக்கடவுள் திருமேனியெங்கும் ஆபரணங்களுடன் தில்லையிற் கிரீடத்துடன் காட்சி தருகிறார். இங்கே உற்சவ மூர்த்தங்கட்குப் பூசையும், பிரார்த்தனையும் நடைபெறுகிறது இம்மூர்த்திகள் சாதாரண திருவிழாக்காலங்களில் அபிஷேக, அலங்கார, ஆராதனை செய்த பின்னரே ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவதாக வரலாறு சொல்கிறது.

**நிருத்தசபை:** தேர் அம்பலத்தையே நிருத்தசபை என்றழைப்பர். இது நடராஜப் பெருமானுக்கு எதிரில் இருக்கும் திருக்கொடி மரத்திற்குத் தென்திசையில் உள்ளது. இங்கே ஊர்த்தவதாண்டவ மூர்த்தியைக் கற்சிலை வடிவிற் தரிசிக்கலாம். தில்லையம்பலமென்று அழைக்கப்படும் சிதம்பரத்தில் அமைந்த ஐந்து சபைகளில் இது சிறந்த கலையம்சம் சொரியும் அமைப்புடன் மிளிர்கின்றது. இச்சபை அதியுயர்ந்த வேலைப்பாடுகளைக் கொண்டது. இச்சபை 56 தூண்களாற் தாங்கப்பெறுகிறது. மேலிருந்து

அடிவரை சிற்பிகளின் கைவண்ணத்தாலமைந்த சிற்ப வேலைப்பாடுகள் அபூர்வமானவை. இச்சபாமண்டபம் குதிரை பூட்டப்பட்ட தேர் வடிவம் கொண்டது. தேர் அம்பலமே நிருத்த சபையாரும் இச்சபையின் முற்பகுதியில் சிவனின் திருக்கோலம் புடைப்புச் சிற்பமாகக் காட்சி தருகிறது. இறைவன் பஞ்சமுக வாத்தியத்தை வாசிக்கும் பாணியில் இருக்கிறார். நிருத்தசபைக் கருவறையில் ஊர்த்தவதாண்டவ மூர்த்தியும், போட்டியிட்டு ஆடிய நடனகாளியும் கண்கவர் திருக்கோலத்திற் காட்சியளிக்கிறார்கள். இம்மண்டபத்தின் தென்மேல் திசையிமைந்த கருவறையில் சரபமூர்த்தி தென்படுகிறார். சிவன் மனிதன், பறவை (கழுகு) மிருகம் (சிங்கம்) என்ற வடிவங்கள் மூன்றும் ஒருங்கமைந்த நிலையில் எழுந்தருளி இருக்கிறார் இத்திருக்கோலமே சரபமூர்த்தியாகும். ஸ்ரீமந்நாராயணன் நரசிம்மவடிவந் தாங்கி இரணியனைக் கொன்றும், வேகம் தணியாமல் இருந்தபோது அவருடைய சினத்தைத் தணிக்கவே சிவன் சரபமூர்த்தியானார். இராவணனைவதம் செய்தபோது இராவணாந்தகனான திருமால் இரணியவதத்தில் இரணியாந்தகன் ஆனார். திரிபுரங்களை எரி செய்த சிவனுக்கு திரிபுராந்தகன் என்ற திருநாமம் உண்டு. நடனகோலங்கள் யாவும் அபூர்வ பாவங்களுடன் சித்திரிக்கப்பட்டுள்ளன இச்சபையில் எனலாம். சிற்பிகளின் கைவண்ணத்தில் எழுந்த இச்சபைக்கு நிருத்த சபையென்ற பெயர் சாலப்பொருந்தும் மேனாட்டவர்கள் இதைக்கண்டு வியந்து மெய்மறந்ததை எழுத்திலும் வடித்துள்ளனர்.

**இராசசபை:** ஆயிரங்கால் மண்டபமே இராசசபையென அழைக்கப்படுகிறது. இதைத் தேவரகசிய மண்டபம் என கே. கே. இராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறார். இம்மண்டபத்தை மூன்றாங் குலோத்துங்க சோழன் கட்டுவித்தான். தெய்வச்சேக்கிழார் பாடிய, பக்திச்சுவை நனிசொட்டும் திருத்தொண்டர் (பெரிய) புராணத்தை அரங்கேற்றவே மன்னன் இம்மண்டபத்தைக் கட்டுவித்தான். இம்மண்டபத்தில் வரலாற்றுப் புகழ் வாய்ந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தை அரங்கேற்றிய மண்டபம் இது. மாணிக்கவாசகர் இங்கேதான் புத்தரை வாதில் வென்று, பௌத்த மன்னனின் ஊமைப் பெண்ணைப் பேசவைத்தார். சோழமன்னர் மரபில் வந்த பல அரசர்கள் ஆயிரங்கால் மண்டபத்திலே தான் முடிசூட்டப் பெற்றனர். இரண்டாம் குலோத்துங்கனுக்கும் இங்கே தான் முடிசூட்டப் பெற்றது.

மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தரம் ஆகிய தினங்களைப் பத்தாம் நாளாகக் கொண்டு, சிதம்பரத்தில் நடைபெறும் திருவிழாக்களில் ஒன்பதாம் நாட்களில் நடைபெறும் விழாவில் காலையில் கூத்தப்பிரான் திருத்தேரில் எழுந்தருளி அன்று நான்கு வீதிகளிலும் தரிசனம் அளித்து இரவு இம்மண்டபத்தில் எழுந்தருளி இருந்து விடியற்காலை ஆறுமணிக்குள் அபிடேகம் செய்யப்பெற்று அடியார்களுக்கு அருள்பாலிக்கிறார். பத்தாவது தினம் எம்பிரானும், எம்பிராட்டியும் (திரிபுரசுந்தரி) முன்னும் பின்னுமாய் மாறி மாறி ஆனந்தத்தாண்டவம் செய்து கொண்டே சிற்றம்பலத்துக்கு எழுந்தருளுவர். இக்காட்சியைக் காண ஆயிரம் கண்கள் வேண்டுமே என்றதற்கமைய இதுவே அநுக்கிரக தரிசனம் என்றழைக்கப்படுகிறது. இவ்வரிய மண்டபத்தைச் சிற்பக் கருவூலம் என்று கூறலாம். உச்சியில் ஐந்து விமானங்கள் உள. இது போன்ற மண்டபங்களைப் பல தென்னாட்டுத் திருத்தலங்களிலும் காணலாம். தில்லைத்தலத் தூபிகள் ஏனைய ஆலயங்களைப் போன்றிராமல் சாதாரண வீட்டுக்கூரை போல் அமைந்துள்ளன என்பது கவனத்துக்குரியது. எனவே ஆடுந்திருக் கோலந்தாங்கி உலகை நடத்தும் சிவன் சபாநாயகர், சபாபதி, சபாநாதர் என்றெல்லாம் அன்புற அழைக்கப்படுகிறார். பாடுகின்ற புலவோர் தேடுகின்ற திருவடி. அது ஆடும் அழகன் திருவடிகளே.

தில்லையில் பஞ்சசபைகள் இருப்பதுபோல சிதம்பரம் உட்பட ஐந்து திருக்கோயில்கள் தென்னாட்டில் அமைந்துள்ளன.

1. பொன்னம்பலம் (சிதம்பரம்)
2. மதுரை (வெள்ளியம்பலம், கால்மாறி ஆடியதலம்)
3. திருநெல்வேலி (செப்பறை, தாமிரசபை)
4. திருக்குற்றாலம் (சித்திரைசபை)
5. திருவாலங்காடு (இரத்தினசபை, மணிமன்று)

தில்லையம்பலவாணரின் பஞ்சசபைகளை மேலே கண்டோம். எனவே மற்ற நான்கு சபைகள் பற்றி இனிப்பார்ப்போம்.

**வெள்ளியம்பலம்:** இது ஆலவாய் என்னும் மதுரையில் அமைந்துள்ளது நடராசன் கால்மாறி ஆடிய தலம் இது இங்கே 64 திருவிளையாடல்கள் நடந்தன. மீனாட்சிக்கும் சோமசுந்தரேசர்க்கும் தனித்தனி சந்நிதிகள் உண்டு.

**செப்பறை அல்லது தாமிரசபை:**
இதற்கு இராஜவல்லிபுரம் என்ற பெயரும் உண்டு. இறைவன் நெல்லையப்பர் பிராட்டி காந்திமதி அம்மையார் ஐந்துசபைகளுள் இங்குள்ளது தாம்பிரசபை தாமிரம் செம்பு. எனவே செப்பறை யென்றாயிற்று. தமிழிலே கரும்பு -கரும்பாகவும், இரும்பு இருப்பு எனவும், வல்லினம் மிக்குவருவது இலக்கண மரபு. அதுபோல செம்பு செப்பாயிற்று. யாழ்ப்பாணத்துத் தென்மராட்சியைச் சேர்ந்த கச்சாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு மகான் நீண்ட காலம் இத்தலத்திற் தவம் செய்து இறையடி சேர்ந்தார். அவரின் சொந்தப்பெயர் தெரியாது, எனவே அவர் செப்பறைச் சுவாமி என்றே அழைக்கப் பெற்றார் தாம்பரணி என அழைக்கப்படும் தண்பொருநை ஆற்றங்கரையில் இத்தலம் அமைந்துள்ளது. இறைவனது நிவேதனத்துக்காகச் சேமிக்கப்பெற்ற நெற்களஞ்சியம் அழியாமல் வேலிகட்டிப் பாதுகாத்தமையால் நெல்வேலியாயிற்று. சுவாமி சந்நிதிக்கு எதிரில் ஏழிசை ஒலியை எழுப்பும் கருங்கற்தூண்கள் இருக்கின்றன. ஒரு சிறு தடியாற் தட்டினால் இனிய ஓசையைக் கேட்கலாம் காந்திமதித் தாயார் மீது ஒரு அருமையான பிள்ளைத் தமிழும் உண்டு.

**"காண்டகு மலைமகள் கதிநிலா முறுவல்செய் தருளவேயும்**
**பூண்டநா கம்புறங் காடரங் காநட மாடல்பேணி**
**ஈண்டுமா மாடங்கள் மாளிகை மீதெழு கொடிமதியம்**
**தீண்டிவந் துலவிய திருநெல்வே லியுறை செல்வர்தாமே"**

திருமுறை 3: 92,4

**சித்திரசபை:** திருக்குற்றாலமே - குறும்பலா என்று அழைக்கப்படும். தலவிருட்சம் பலாமரம், குற்றால நீர் வீழ்ச்சி பெருமையானது. சண்பகாடவி அருவியும், தேனருவியும் ஐந்தருவியும் பாயும் இடம் அகத்தியர் திருமால் உருவைக் குறுகச் செய்து சிவலிங்கம் ஆக்கியதால் குற்றாலம் என அழைக்கப்படும். தலவிருட்சத்தால் குறும்பலா என்ற பெயர் ஏற்பட்டது. நடராசப் பெருமானின் ஐந்து சபைகளுள் இங்கேயுள்ளது சித்திரசபை. இது கல்லால் ஆனது சித்திரை புத்தாண்டு இங்கே முக்கியமானது. திரிடராசப்புக் கவிராயரின் குறவஞ்சி, தலபுராணம் மிகச் சிறந்த பிரபந்தங்கள்

**"ஈயறியாப் பூந்தேனே யெழுத்தறியா மறைப் பொருளே**
**காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே**
**தாயறியாக் கருவிலிருந் தமுதூட்டுந் தாய்த்துணையே**
**நீயறியாச் செயலுண்டோ நிகிலபரம் பரமூர்த்தி"**

திரிகூடராயப்பக் கவிராயர் பாடிய குற்றாலத்தலபுராணம்.

**இரத்தினசபை , மணிமன்று:**

காளியோடாடிய சிவன் அவளும் தோல்விபோகாமல் ஆடியதைக் கண்டு அவளைத் தோற்கடிப்பதற்காக தனது இடது காலைத் தலையளவு தூக்கி ஊர்த்தாண்டவம்புரிந்த தலம் எண்தோள் வீசி நின்றாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ என அப்பர் இங்குள்ள கூத்தனைப் பாடினார். எனவே ஆடலரசன் எட்டுத் திருக்கரங்களோடு காட்சி தருகிறான் காரைக்காலம்மையாரோடு தொடர்புடைய சேத்திரம் இது

**"எண்ணார் தங்கள் எயிலெய்த எந்தாய் எந்தை பெருமானே**
**கண்ணாய் உலகங் காக்கின்ற கருத்தா திருத்த லாகாதாய்**
**பண்ணார் இசைகள் அதுகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்**
**அண்ணா ஆலங்காடாவுன் அடியார்க்கடி யேனாவேனே"**

அப்பர் பெருமான் 7: 52,6

**ஆதாரம்:**


1. அடங்கன்முறை கங்கை வெளியீடு
   **பதிப்பாசிரியர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்**
2. சிதம்பரம் நடராஜர் திருக்கோயில்
   **கே. கே. இராமலிங்கம்**
3. தில்லைத் திருக்கோயில்

**"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே**
**காணார்க்குங் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே**
**வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரம்அளிக்கும் வரமே**
**மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே**
**நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்றநடுவே**
**நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே**
**எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே**
**என் அரசே யான்புகலும் இசையும் அணிந்தருளே"**

திரு அருட்பா


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**




**தொடர்புகளுக்கு:** **கண் வைத்திய நிபுணர்கள்:**

**ஆறு.திருமுருகன்** **Dr. ச. குகதாசன், 021-222 3645**
தொலைபேசி **Dr. சிவந்தா, 021-222 3149**
**021-222 6550** யாழ்.போதனா வைத்தியசாலை

சிறுவர் விருந்து

# சடாயுவின் சீலம்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான் பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து! நீங்கள் எல்லோரும் நலமாக வாழ எல்லாம் வல்ல பராசக்தி நல்லருள் புரிவாராக! நாம் எல்லோரும் இறைவனை பயபக்தியுடன் வணங்கி, வழிபட்டு வாழப் பழக வேண்டும். அதனால் மிக நன்மை உண்டு. பறவைகள், மிருகங்கள் கூட இறைவனை வழிபட்டு உயர் நிலை அடைந்திருக்கின்றன. அதற்கு உதாரணமாக இப்போ ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

முற்காலத்திலே பாரத நாட்டிலே உள்ள தண்டகாரண்யம் என்ற காட்டிலே சடாயு என்று ஒரு கழுகு இருந்தது. அது மிகவும் அறிவுக்கூர்மையும், செயல்திறனும் கொண்டிருந்தது. தனது நண்பனான சம்பாதி என்ற கழுகுடன் சேர்ந்து காஞ்சீபுரம் என்ற நகருக்குப் போகும் அங்கே உள்ள கைலாசநாதர் கோயிலில் இரண்டும் சுவாமியைக் கும்பிடும். பிறகு அங்கிருந்த பூஞ்சோலையில் பூ எடுத்துக்கொண்டு திருக்கழுக்குன்றம் என்ற மலைமேலிருக்கும் சிவபெருமானைத் தேடிப் பறந்துபோய், பூவைத்து வணங்கும். பின் வைத்தீஸ்வரன் கோயிலில் போய் வணங்கும்.

இந்த வழிபாட்டின் பயனாலே சடாயுவுக்கு மனிதருடைய மொழியை பேச்சை விளங்கிக் கொள்ளவும் மனித மொழியில் பேசவும் கூடிய திறமை ஏற்பட்டது.

ஒருநாள் தண்டகாரண்ய வனத்திலே ஒரு பெரிய மரத்தின்மேல் சடாயு அமர்ந்து இருந்தது. அன்று அந்தக் காட்டிலே தனியாக வேட்டையாட வந்திருந்த தசரதராஜா களைத்துப்போய் சடாயு இருந்த மரத்தின் கீழே வந்து படுத்து ஓய்வு கொண்டான். தசரதன் அயோத்தி நாட்டின் அரசன். இளைஞன். அவனுக்கு மிருகங்கள், பறவைகளின் பாஷை தெரியும். மிருகங்கள், பறவைகளைக் காண முடியாத நேரத்தில் அவற்றின் சத்தத்தைக் கேட்டே, அவை இருக்கும் இடத்தைச் சரியாக அறிந்து, அம்புவிட்டு அவற்றை அடித்து வீழ்த்தும் திறமை படைத்தவன். இப்போ; களைப்படைந்த தசரதன் மரநிழலில் படுத்து நித்திரை கொண்டுவிட்டான் அவனது கால்கள் ஒரு பாம்புப் புற்றின்மேல் கிடக்கின்றன.

தசரதன் நித்திரை கொள்கிற அழகைப் பார்த்து ரசித்தபடி கழுகாகிய சடாயு மரத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறது. தசரதன் நேர்மையானவன் இந்திரனுக்கே போரில் வெற்றி ஈட்டிக்கொடுத்த மாவீரன். அழகாக அவன் நல்லாட்சி புரிபவன். இதெல்லாம் சடாயுவுக்குத் தெரியும். ஆகவே, மிக அன்புடனும் மரியாதையுடனும் தசரதனை அது கவனித்துக் கொண்டிருந்தது. நித்திரையில் ஆழ்ந்த தசரதன் இயல்பாகப் புரண்டு படுத்தான். அப்போது அவனது கால்கள் பாம்புப் புற்றுக்கு மேலே புரண்டன. புற்று வாசல் சற்றே சிதைந்து மண் சரிந்தது. அந்தப் புற்றுக்குள்ளே அதுவரை பயத்துடன் படுத்துக்கிடந்த நாகபாம்பிற்குச் சினம் மூண்டது. அது சீறிப் படம் எடுத்தபடி வெளியே பாய்ந்துவந்தது. தசரதனின் காலில் கொத்துவதற்காகத் துள்ளி எழுந்தது. அதுவரை சடாயு நடந்ததை எல்லாம் கவனித்துக் கொண்டிருந்த சடாயு சலேரெனப் பாய்ந்து பறந்து வந்து நாகபாம்பினை விரைவாகத் தன் கூரிய அலகினால் கொத்தித் தூக்கி எடுத்தது. சிறிது தூரம் இழுத்துச் சென்று பாம்பைக் கொன்றது. அந்தப் பாம்பின் சீறலும், சடாயு வேகமாகச் சிறகு விரித்துப் பறந்த சத்தமும் தசரதனை எழுப்பிவிட்டன. திடுக்கிட்டு எழுந்த தசரதன் மிகப் பெரிய கழுகு. அரசனாகிய சடாயுவின்மேல் அம்பெய்து அதைக் கொல்வதற்காக உடனே தன் வில்லில் அம்பினைப் பூட்டினான்.

சடாயு தனக்குத் தீங்கு செய்யப் போகிறது என அவன் தவறாக நினைத்து விட்டதே காரணம் அப்போது; "அரசே, அவசரப்படாதே! குரலில் நிதானமடைவாயாக!" என்று சடாயு மனிதக் குரலில் சொல்லியது! தசரதன் திடுக்கிட்டான். அவனது வில் கையிலிருந்து நழுவியது.

"யார் நீ? பறவை வடிவில் வந்த தேவனோ? அசுரனோ?" என்று கூவினான் தசரதன்.

"கழுகு அரசன், சடாயு நான் இதோ! உன்னைத் தீண்ட முயன்ற நாகபாம்பினைக் கொல்வதற்காக நான் அவசரமாக மரத்திலிருந்து இறங்கிய சத்தமே உன் நித்திரையைக் குழப்பிவிட்டது. என்னை மன்னித்துக் கொள்வாய் அரசே!" சடாயு தலை தாழ்த்தி அரசனிடம் மன்னிப்புக் கேட்டது.

வியப்பினால் விரிந்த தசரதனின் கண்கள் சடாயு வால் கொல்லப்பட்ட பாம்பின் உடலையும் கண்டன நடந்ததை அவன் யூகித்துக் கொண்டான். "சடாயுவே! என் உயிரைக் காத்த உன் உயிரைப் பறிக்க முயன்ற நான் பெரும் மூடன்! என்னை நீயே மன்னிக்க வேண்டும்!" என்று கூறியபடி எழுந்த தசரதன் அந்தப் பறவையைக் கட்டித் தழுவிக் கொண்டான். கண்ணீருடன் மீண்டும் மீண்டும் மன்னிப்பை வேண்டினான்.

சடாயு அவனைத் தன் இறகுகளால் தழுவிக் கண்ணீரைத் துடைத்தது. "அரசே! களைத்திருக்கிறீர்கள். சற்றுப் பொறுத்திருங்கள் இதோ வருகிறேன்" என்று சொல்லிப் பறந்தது. சில நொடிகளில் திரும்பி வந்தது. அதன் அலகுகளில் தண்ணீர் குடுவை கால்களில் பழக்குலை. அரசே! பழங்களைச் சாப்பிட்டு நீர் அருந்திப் பசியாறுங்கள் என்று அது வேண்டியது.

தசரதன் உள்ளம் உருகியது. "பறவை வேந்தே! நீ எம்போன்ற மனிதனை விட மேலானவன் உன்னை என் சகோதரனாகவே எண்ணுகிறேன்" என அன்பு பாராட்டினான். அன்றுமுதல் சடாயு தசரதனுக்குச் சகோதரனாகவே உதவிகள் பல புரிந்தது. இராமன் பரதன் சத்துருக்கன், இலக்குமணன் ஆகியோர் சிறுவயது முதல் சடாயுவைத் தங்கள் சிறிய தந்தை என்றே மதித்து அன்பு பாராட்டினர்.

பிற்காலத்தில் இராமனின் வனவாச காலத்தில் சீதையை இராவணன் கவர்ந்து செல்லும் போது சடாயு இராவணனின் விமானத்தை மறித்து அவனுடன் சண்டை செய்தது. இராவணன் சந்திரகாசம் என்ற வாளால் சடாயுவின் இறக்கைகளை வெட்டிவிட்டான். பூமியில் விழுந்த சடாயு, இராமன் வரும்வரை உயிரோடு இருந்தது.

சீதையைத் தேடி வந்த இராமனிடம் அவளை இராவணன் விமானத்தில் ஏற்றித் தன் நாட்டிற்குக் கொண்டு சென்ற செய்தியைச் சொன்ன பிறகே உயிர் விட்டது.

இராமனும், இலக்குமணனும் தங்கள் அன்பிற்குரிய சிறிய தந்தையான சடாயுவுக்கு முறைப்படி ஈமக்கடன் செய்தனர்.

சடாயுவும், சம்பாதியும் முறைப்படி சிவலிங்கம் தாபித்து பூசைசெய்து வழிபட்ட சிறப்பினால்; திருஞானசம்பந்தர் தமது தேவாரத்திலே அவர்களைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.

பார்த்தீர்களா பிள்ளைகளே! பறவைகள் கூட எவ்வளவு பண்பாட்டோடு வாழ்ந்திருக்கின்றன.

நாடகம்:

# தபோபலம்

திரு. சிவ.சண்முகவடிவேல் அவர்கள்

காட்சி: 8 (சென்ற இதழ் தொடர்ச்சி)

இடம்: தனிமை

**சப:** (அழுகை) அரசே! என்னை விட்டு விடுங்கள்.... என்னை விட்டு விடுங்கள்... நான் உங்களிடத்தில் வரமாட்டேன் வரவே மாட்டேன்!! தாம்பினால் என்னைக் கட்டி இழுக்காதீர்கள்...!! என்னை வலி செய்ய வேண்டாம்.. என்னை வருத்தாதீர்கள்...

**விசு:** சபலை.. சத்தமிடாதே..! நான் யார் தெரியுமா?

**சப:** உலகத்தைக் காக்கும் கடவுளா? நான் சபலை... ஓர் அபலை என்பதை மறந்து விடாதீர்கள்...

**விசு:** என் சொற்படி வந்தால் உனக்கும் கவலை வராது... துன்பம் தூர விலகிச் செல்லும்...

**சப:** நான் வசிட்ட ரிஷியைப் பிரிந்து வரமாட்டேன்! அவர் என் குரு... அவர் என் தெய்வம்.. அவர் என் பந்து மித்திரர். கணப்பொழுதும் அவரை நான் விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன்!!

**விசு:** சபலை.. நீ ஆணவத்திற்கு அடிமையாகிவிட்டாய்!

**சப:** இல்லை அரசே! எனக்கு ஆணவம் எதுவும் இல்லை நான் சபலை.. ஓர் அபலை... உவலை உணரேன்....சவலைக் கடலுள் தடுமாறும் என் கவலைக் கெடுப்பது தங்கள் தலைமைக்குத் தகுதியாகும்.. என் செயலைக் கண்ட பின்னுமா மயலை மாற்ற மறுக்கின்றீர்கள்!!

**விசு:** சபலையே! நான் விசுவாமித்திரன்... முனிவர்க்கு முனிவன் அரசர்க்கு அரசன்!!

**சப:** அதை அறிந்து தான் ஆற்றாது அரற்றுகின்றேன்! என்னை விட்டு விடுங்கள்.. என்று மன்றாடுகின்றேன்!

**விசு:** மன்றாடி உன்னை நான் கூட்டிச்செல்வதை மறுக்க மாட்டார். மாறாக மனம் மகிழ்வார்... சபலையே....நீ சஞ்சலப்படாதே....!! உன்னை நான் உயர் நிலையில் உறையச் செய்வேன்! உனக்கு எந்தக் குறையும் கைகூடாது! உன் எண்ணம் போல நீ உல்லாசமாக உலவலாம்... என்னை நம்பி என் பின் நீ வரவே வேண்டும்.

**சப:** அரசே! தாங்கள் பேசும் இனிய வார்த்தைகள் என் செவிகள் மடுக்க மாட்டாது. எது கொடுத்தாலும் கைகள் தாங்க மாட்டாது. பிரம்ம ரிஷியின் பின் நிற்பதல்லால் பிறிதொன்று பேணமாட்டேன்.. இது நிச்சயம்.... நம்புங்கள்...!

**விசு:** உன் விடயத்தில் நான் நயமாக நடந்து கொள்வேன்....

**சப:** நான் மகரிஷிக்கு யாது ஒரு துன்பமும் செய்ததில்லை. அவர் என்னிடத்தில் மேலான தூய அன்பு வைத்திருக்கின்றார். அது போல எனக்கும் அவரிடத்தில் அளவு கடந்த பிரியம்...

**விசு:** சபலை நீ அறிவாயா? அளவு கடந்த அன்பையும் உளம் நிறைந்த பிரியத்தையும் காலம் உண்டுவிடும். கால மாற்றத்தால் நீ ரிஷியிடத்தில் வைத்த அன்பு வேண்டாத ஒன்று என்று கண்டு கொள்வாய்!! உலகத்தில் பிரப்பிரமம் ஒன்றைத் தவிர வேறு ஒன்று நிலையானது என்று நிச்சயிக்க முடியுமா? சபலாய்ஆச்சிர மத்தினின்றும் அகல்வாய்!!

**சப:** அரசே! தாங்கள் பொன் சொரியப் பேசினாலும் புகழ்மாலை சூட்டினாலும் தங்களுடன் வரவே மாட்டேன்!!

**விசு:** வரமாட்டாயா?

**சப:** என்னை விட்டு விடுங்கள்!!

**விசு:** விடமாட்டேன்

**சப:** வருத்தாதீர்கள்...

**விசு:** வரவே வேண்டும்

**சப:** துன்புறுத்தாதீர்கள்

**விசு:** என் துன்பம் துடைக்கமாட்டாயா?

**சப:** தாங்களே துன்பத்தைத் தேற்றிக் கொள்ளுங்கள்!!

**விசு:** உன்னால் முடியாது....(சிரிப்பு)

**சப:** முடியாது!

**விசு:** (சிரிப்பு) ஹும்... முடியாது.... அதையும் நான் பார்த்து விடுகின்றேன்... (சிரிப்பு) சபலை... ஹ...ஹ...ஹா...!

**சப:** (அலறி) சுவாமி... பிரம புத்திரா! என் தெய்வமே... திருவுளம் இரங்காதோ..? தாங்கள் என்னைக் கைவிட்டு விட்டீர்களோ? தங்களிடத்திலிருந்து அரசர் என்னை அபகரிக்க ஆர்வங் காட்டுகின்றார். சபலை ஒரு அபலை ஆனேனோ...! அரச சேவகர்கள் என்னை அங்கு மிங்குமாக இழுக்கின்றார்கள்...! ஐயகோ... வசிட்ட வள்ளலே!! வரமாட்டீர்களா? தங்கள் தபோபலம் எங்கே... எங்கே... ஒரு நாள் தவத்தை எனக்கு உதவத் தகாதா? அரசருடைய ஆணைக்கு அஞ்சி விட்டீர்களா?

**விசு:** சபலை... (சிரிப்பு திரை)

**காட்சி: 9**
**இடம்: தனிமை**

**சப:** (ஓடிவருதல்) தவ முனிவரே..! வசிட்ட வள்ளலே...! என்னையுமா ஏங்க வைத்தீர்கள்.. பாருங்கள், பாராள் பார்த்திபருடைய பரிசனர்கள் என்னுள்ளம் பதை பதைக்க இழுத்துப் பறிக்கிறார்கள். காப்பாற்றுங்கள்... முனிவரே என்னைக் காப்பாற்றுங்கள்.. காசினிக் காவலனாரிடத்திருந்து உன்னைக் காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்.. நான் சபலையா அல்லது அபலை தானா?

**வசி:** சபலை நீ சலிக்காதே! என் உடன் பிறப்பின் மேலாக நான் உன்னை நேசிக்கின்றேன்!! அதை நீ என்றும் மறந்து விடாதே...! நீ என்னிடத்திலிருந்து நீங்கினால் என்னுடலில் பிரதான அவயவம் அகன்றது போலாகும். இதை நீ நம்பு!

**சப:** நான் அதை நம்புகின்றேன்!

**வசி:** பெண்ணே! உன்னை நான் உதறிவிடவில்லை. நீ என்றும் எனக்கு எத் தீங்கும் இழைக்வில்லை.

**சப:** பின் எதற்காக இதைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள்? புயல் போலச் செயல் நிகழவும் மயல் உற்றவராக அயலவர் போல இயல்பாக இருக்கின்றீர்கள்....?

**வசி:** எதிர்பாராத ஒரு புதிர்... இந்த அரசரோ மிக மிகப்பலம் பெற்றவர்... கலங்காத கல் நெஞ்சர்.. தன்னுடைய பலத்தின் வலத்தினால் உன்னை இழுத்துக் கொண்டு போகின்றார்.

**சப:** தங்களுடைய பலம் எங்கே பறந்தது?

**வசி:** நாட்டை ஆளும் அரசருடைய சேனையின் பலம் எங்கே! காட்டையே தஞ்சமாகக் கொண்டு தவத்தில் நாட்டம் வைத்த என் பலம் எங்கே...!

**சப:** தெய்வாதீனமாக அரசரிடத்திலிருந்து தப்பிப் பிழைத்து விட்டேன்....! தங்களைச் சரண் புகுந்தேன்!!

**வசி:** அஞ்சாதே!

**சப:** இனி மேலாவது அரசர் என்னை அபகரித்து ஆழ்குழி வீழ்த்த விடாமல் அரவணைத்துக் கொள்ளுங்கள்...

**வசி:** சபலையே! நீ சோகத் தீயால் வருந்தித் துயரக் கடலுள் ஆழாதே....!

**சப:** முனி சிரேட்டரே! என்னைத் தனிக்க விடலாமா?

**வசி:** இவர் நம்மை ஆளும் அரசர். நமது தபோபலத்தால் இவரைத் தண்டிப்பது தருமம் ஆகாது!

**சப:** வசிட்டரே! முனி சிரேட்டரே! இது தருமம் தானா?

**வசி:** அவர் பூபாலகர்!! அத்திர பலம் உடையவர் நால்வகைச் சேனையும் உதவிக்குத் தயாராக நிற்கின்றது... சபலையே இந்தத் தனித்த தவமுனிவனால் உனக்கு என்ன செய்ய முடியும்?

**சப:** தவத்தரே! தாங்கள் பிரம்ம ரிஷிகளுக்குள் எல்லாம் மேலானவர். எல்லை இல்லாத தவஒளி மிக்கவர். பிராமணருடைய தவ பலத்திற்கு எதிரில் சைத்திரியருடைய பலம் எம்மாத்திரம்?

**வசி:** நேருக்கு நேராக நிற்கலாமா?

**சப:** தங்கள் மகிமை தலைசிறந்தது

வசி: என் நிலையை நான் மறந்தாலும் உன் நிலையில் நீ என்னை மறக்கவில்லை..,

சப: அதனால் தான் அரற்றுகின்றேன், பாரில் தங்களை மிக்க பலவானைப் பார்க் கலாமா! விசுவாமித்திர வேந்தர் வித்தையில் வல்லவரானாலும் தங்களுடைய ஒளிக்கு முன் எதிர் நிற்க வல்லரோ!!

வசி: (சிரித்து) மனவாட்டத்தின் போதும் வாய்மொழியில் வல்லவளாகத் தான் விளங்குகின்றாய்!!

சப: முனிவரே! தங்களுடைய மந்திர பலத்தால் என் சக்தி தளைத்து ஓங்குகின்றது! என்னை அனுப்பி வையுங்கள்! அரசருடைய போராட்டத்தை என் போராட்டத்தால் பொடிப்பொடியாக்குவேன்... பல்லோரும் புகழ்ந்து பாராட்டச் செய்வேன்!! அவ ருடைய வீர ஆட்டம் ஆட்டங் காண வைப்பேன்!!

வசி: சபலையே... இனியும் உன் எண்ணத்தைத் தடுத்து வைக்க நான் தயார் இல்லை. பகைவரைப் பாரில் வீட்டும் சேனையைப் படைப்பாய்!!

சப: (சிரித்து) பிரம்ம ரிஷியே பாருங்கள்! அரசருடைய ஆற்றல் அடங்கப் போகின்றது! பெரும் படைகளைப் படைத்துக் கொண்டே இருப்பேன்...! பாராள் பார்ப்பதிபர் படும் பாட்டைப் பாருங்கள்... ஹும்... ஹு.. ரம்பா... ஹும்..ரம்பா...

வசி: சபலையே! நின்னுடைய சாதுரியம் தான் என்னே! குபுகுபு என்று உன்னிடத் திலிருந்து அளவில்லாத வீராதி வீரர்கள் வெளிவந்த வண்ணமாக விளங்கு கின்றார்கள்!

சப: அந்தணரே! என் வல்லபம் எல்லாம் தங்களுடைய மந்திர சக்தியின் பலமாகும்..! நான் மேலும் சேனையைச் சேகரித்துக் கொண்டே இருப்பேன்.. பாராற் வேந்தர் தம் பலத்தைப் பார்க்கட்டும் தாங்கள் வீரர்களை அணி வகுத்துக் கொள் ளுங்கள்...! ஹுரம்பா... ஹுரம்பா...ஹுரம்பா..

வசி: சேனா வீரர்களே செல்லுங்கள் முன்னேறிச் செல்லுங்கள் அரசருடைய அணி வகுப்பை அழித்து விடுங்கள்.. அணிவகுப்பை சின்னாபின்னப் படுத்துங்கள்..

விசு: (கோபச் சிரிப்பு) ஹ...ஹா! வசிட்ட முனிவரே! நீருமா... களத்தில் இறங்கி விட்டீர்கள்...! எனது சேனையை நாசம் பண்ணிவிட்டீர்கள். என்னுடைய படை களைப் பாரில் படுத்தி விட்டீர்கள். ஹ..ஹ..ஹா..! சபலை உன்னுடைய சாகசம் தானா இது? சற்றுப் பொறு... இந்த விசுவாமித்திரன் எப்படிப்பட்டவன் என்பதை இனி மேல் அறிவாய்..

சப: (சிரித்து) அரசே! கெஞ்சு மட்டும் கெஞ்சினேன் கொஞ்சு மட்டும் கொஞ்சினேன். கிஞ்சித்தும் வஞ்சிப்பை விட்டபாடில்லை... இனி விஞ்சு மட்டும் விஞ்சப்போகின் றேன்... அஞ்சுவதை அகன்றிட்டேன்.

விசு: உண்மை தானா? அதையும் தான் நான் பார்த்து விடுகின்றேன்...! சபலை நெருப்போடு விளையாடும் பஞ்சு என்பதைப் படைத்து விடுவேன்...! பார்க்கின் றாயா? இப்பொழுதே என்னுடைய அத்திரங்களுக்கு நாசமாகப் போகின்றீர்கள்...!(சிரிப்பு)

வசி: சபலே..! அளசிறந்த சகரர்களைத் தோற்றுவிப்பாய்! யவனர்களைப் படைப் பாய்..ம்..விரைவாக

சப: முனிவருடைய ஆணை... இதோ, வீராதி வீரர்களை வெளிப்படுத்துகின்றேன்...!

வசி: சேனா வீரர்களே செயலில் ஈடுபடுங்கள்.. விசுவாமித்திரரின் சேனா சைநியங்களைச் சின்னாபின்னப் படுத்துங்கள்!

சப: (சிரித்து) அரசே! இப்பொழுதாவது புத்தி தெளிகின்றதா? எங்கே அரசருடைய சேனைகள்? சூரிய ஒளி கண்ட பனி ஈட்டம் போலப் பாழாகி விட்டதைப் பார்த்தீர்களா?

விசு: என்னுடைய சேனையை நிர்மூலம் செய்த உங்களைச் சும்மா விடமாட்டேன்! (சிரிப்பு) இதோ பாருங்கள் நான் விடும் அத்திரத்திற்கு அவலப்படப் போகின்றீர்கள்...

வசி: சபலையே! சஞ்சலத்திற்கு ஆளாகிவிட்டாய்! பார்த்தாயா, நீ தோற்றுவித்த சேனைகள் விசுவாமித்திரருடைய சோதனைக்குத் தோற்றுவிட்டன. போனவை திரும்பி வரமாட்டாது. புதிது புதிதாகச் சேனைகளைப் படைப்பாய்!!

சப: விசுவாமித்திரர் அசுரத்தனமாக அத்திரங்களை அனுப்புகின்றார். அவை பசு மரத்தாணி அறைந்தாற் போலச் சேனையைச் சிதைவு செய்கின்றன.. பிரம்ம ரிஷியின் வரம் போல உரமிக்க படைகளை உருவாக்குவேன்...! ஹும்ரம்பா.. ஹும்ரம்பா...ஹும்ரம்பா பாருங்கள் முனிபுங்கவரே...! விதம் விதமான சேனைகளை வகை வகையாகத் தோற்றுவித்துத் தொகை தொகையாகத் தொகுவிப்பேன்... (சிரிப்பு)

வசி: சபலாய்! உன் ஆற்றலைப் போற்றுகின்றேன்! பார்க்கும் இடமெங்கும் படைஞர்களாகப் பரம்புகின்றார்கள்!

சப: சாகச மிக்க சகரர்களைப் பாருங்கள்!

வசி: தேசம் எங்கும் செறிகின்றார்கள்!

சப: யவனர்களைக் கண்டீர்களா?

வசி: கண் நிறைந்து காணப்படுகின்றார்கள்!

சப: கிராதகர்கள் பராவுகின்றார்கள்!

வசி: பார்க்கப் பார்க்க உள்ளம் பரிமளிக்கின்றது!

சப: விசுவாமித்திரருடைய வீறாப்பும் சேனைக்கு மாறாக என்ன செய்ய முடியும்?

வசி: (உரத்து) வீரர்களே! வெற்றிப் பாதையில் வீறு நடை நடவுங்கள்! ஆக்கிரமித்து அழியுங்கள்... அரசருடைய அத்திரங்களையும் அணிவகுப்பையும் துணிபடச் செய்யுங்கள்... (சிரிப்பு)

சப: வசிட்ட வள்ளலே! பார்த்தீர்களா?

வசி: பார்க்கின்றேன்.... பார்க்கும் இடம் எங்கும் நீ படைத்த சேனைகள் நின்று ஆர்க்கின்றன!!

சப: விசுவாமித்திரர் சேனை பிசு பிசுத்து விட்டது!

வசி: முனிவருடைய முகத்தில் கோபாக்கினி கொழுந்து விட்டுப் பறக்கின்றது!!

சப: அதோ, தூரத்தே நோக்குங்கள் விசுவாமித்திரருடைய நூறு புத்திரர்களும் ஓடி வருகின்றார்கள். தங்களைத் தேடியே நாடி ஓடி வருகின்றார்கள். (அழுகை)

வசி: சபலை... சஞ்சலம் கொள்ளாதே... என்னுடைய ஹுங்கார மந்திர சத்தியால் அரசருடைய மைந்தர் நூற்றுவரும் நுண் பொடியாக நூறுவார்கள்.. சபலையே! மந்திர சாதனையைப் பார்...(உரத்து) ஹும்.....ஹும்.....ஹும்.... (சிரிப்பு) ஹ...ஹ...ஹா..!

விசு: (தூரத்தில்) வசிட்டரே! நான் செலுத்தும் அத்திரங்கள் அனைத்தையும் பிரம தண்டம் ஒன்றால் துண்டமாக்கி விடுகின்றீரே...! இதோ பிரமக்கணை விரைந்து விடுப்பேன்! இதற்குப் பதில் என்ன?

வசி: (சிரித்து) பொறுத்திருந்து பாருங்கள்!

விசு: (பெருமூச்சு) அதையும் பிரம தண்டம் விழுங்கிவிட்டது!

வசி: விளங்குகின்றதா விசுவாமித்திரரே?

விசு: விளங்குகின்றது வசிட்டரே! பிரம்ம ஒளியின் பலமே பலம்

வசி: கடுந்தவம் புரிந்தீரே...!

விசு: ஆம்! சங்கரனைச் சார்ந்து தவம் புரிந்தேன் அவரிடத்தில் பொங்கிய மேலான அத்திரங்களை பிராமணருடைய பிரம தண்டம் சிரமமின்றித் தடிந்தது!

வசி: விசுவாமித்திரர் புவிக்கு வேந்தர் போலத் தவத்திற்கும் தனியரசர். தவமும் தகுதியும் சேர்ந்தும் பயன்படுத்தும் நெறி பிசகியதால் யாவும் பாழிற்கு இறைத்த நீராயிற்று!

விசு: ஊழி உருண்டு ஓடினாலும் பாழை வளமான வாழ்வு காண்பேன்... இந்த விசுவாமித்திரன் உந்த வசிட்டரை எந்த வேளையிலும் வெற்றி கொள்ளாமல் விடமாட்டான். இது சத்தியம்.

வசி: நோற்றல் ஒன்றே பேராற்றலுக்கு ஏற்ற ஊற்றமாகும்!

விசு: காலம் பதில் கட்டுரைக்கும்!

வசி: அதுவரை காத்திருப்போம்!

விசு: புலன்களை அடக்கிப் புரிவேன் கடுந்தவம். வசிட்டருக்குச் சமானமாவேன்! பின்னர் வசிட்டரை வகையாக வெற்றி கொள்வேன்! (சிரிப்பு)

வசி: அந்த நன்னாளை எதிர்பார்த்துச் சற்றும் தளராதிருப்பேன் நான்!!

**(சிரிப்பு - திரை)**

**(முற்றும்)**

பி: குறிப்பு: 'தபோபலம்' என்னும் நாடகம் 30-10-99இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பப்பெற்றது. அப்போது விசுவாமித்திரராக திரு.கே. சந்திரசேகரன், வசிட்டராக திரு. எஸ். செல்வசேகரன், சபலையாக நிலாமதி பிச்சையப்பா ஆகியோர் பங்கேற்று நடித்தார்கள். தயாரிப்பாளர்: திரு. இராஜபுத்திரன் யோகராஜன்.

இப்போது சில திருத்தங்களோடு மேடை சார்ந்த படிக்கும் நாடகமாக வெளிவருகின்றது.





# சிவன் அருட்கதைகள்

மாதாஜீ அவர்கள்

## 2. தலவிசேடம்:

திருவாலவாய்த் தலத்தில் (சுவர்ண கஞ்சம்) பொற்றாமரைத் தடாகமும் அருகில் ஞானவடிவாய்த் தோன்றிய சோமசுந்தரமூர்த்தி எனப்பெயர் பெற்ற ஒரு சிவலிங்கமும் உண்டு. அதனால் இந்தத் திருவாலவாய்க்கு ஒப்பாகிய தலமும், பொற்றாமரைக் குளத்திற்கொப்பாகிய தடாகமும், சோமசுந்தரருக்கொப்பாகிய சிவலிங்க மூர்த்தியும் மூவுலகிலும் இல்லை. இது சத்தியம்.

எல்லா உலகங்களிலும் சிவதலங்கள் சிறந்து காணப்பட்டாலும் இறைவனால் நினைக்கப் பெற்ற காசி திருக்காளத்தி சிதம்பரம் திருவாரூர் முதலிய திருத்தலங்களிலும் மிகச் சிறந்த தலமாக விளங்குவது திருவாலவாயாகும். இத்திருவாலவாயைப் படைத்த பின்னரே எம்பெருமானால் மற்றைய தலங்கள் படைக்கப்பட்டன. மேலும் எம்பெருமான் திருவாலவாயிலே இருந்து கொண்டு மற்றைய தலங்களைப் படைத்தார்.

திருவாலவாயென்று கேட்டவரே தருமத்தை அடைவர். திருவாலவாயென்று நினைத்தவரே பொருளை அடைவர். திருவாலவாயில் சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்தவரே இன்பத்தை அடைவர். திருவாலவாயில் எந்நாளும் வசித்தவரே முத்தியடைவர்.

இரத்தினச் சுருக்கமாகக் கூறின் மற்றத் தலங்களில் கிடைக்காத பேறுகள் அத்தனையும் திருவாலவாயிலில் உண்டு. திருவாலவாயிலில் வசிப்பதால் மற்றத் தலங்களில் வசித்த பேறுகளும் உண்டாகும்.

திருவாலவாயிலில் வசிப்பவர் எல்லாப் பேறுகளையும் அடைவதால் திருவாலவாய்க்கு ஒப்பாகிய தலம் வேறெங்கும் இல்லை. இதனால் வினைகளை வென்று சிவபெருமானுடைய திருவடிக்கீழ் வாழும் பேரின்பத்தைப் பெற்று உய்ய விரும்புவோர் திருவாலவாயிலே சிவனிடத்து அன்பும் உயிர்களிடத்து அருளும் உடையவராய் எல்லா நூல்களும் அறிந்தவராய் எல்லா மந்திரங்களும் கற்றவராய் எல்லாத் தானங்களும் செய்தவராய் எல்லாத் தீர்த்தங்களும் ஆடினவராய் இருப்பர்.

ஒருமுறை பிரமன் திருகையிலாய முதலிய சிவதலங்களையும் ஒரு தலைத்தட்டிலும் திருவாலவாயை மற்றத் தட்டிலும் வைத்து நிறுத்தபோது திருவாலவாய் கனத்தமை கண்டு, இதுவே மூவுலகங்களிலும் மிக மேலாகிய தலமென நிச்சயித்தார்.

திருவாலவாயின் மறு நாமங்கள் சிவநகரம் கடம்பவனம், சீவன்முத்திபுரம், கன்னியாபுரம், திருவாலவாய், மதுரை, பூலோக சிவலோகம், சமட்டி வித்தியாபுரம், நான்மாடக்கூடல் துவாதசாந்தலம் என்பனவாகும்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

## 3. தீர்த்த விசேடம்:

பரமகாருணியாகிய சோமசுந்தரக் கடவுள். கங்கை, காவிரி முதலிய நதிகளும் கடல்களும் மேகங்களும் பிறவும் தோன்றுதற்கு முன்பே தமக்கு அபிடேகம் செய்தற் பொருட்டுப் பொற்றாமரைத் தீர்த்தம் உண்டாக்கி அருளினார்.

ஆதிகாலத்தில் சொக்கலிங்க மூர்த்தி ஒரு திருவிளையாடல் ஆடத் திருவுளம் கொண்டு அருள்வடிவாகிய மீனாட்சியம்மையாரோடு தமக்கு முன்னும் பின்னும் நந்திதேவர் முதலானோர் துதிசெய்து சூழ்ந்து வர, வைகுண்டம் நாகர் உலகம் சத்திய உலகம் முதலிய உலகங்களில் திருவிளையாடல் செய்து தமது கணநாதர் கண்மேல் திருக்கடைக்கண் சாத்தியருளினார்.

அப்போது அவர்கள் எம்பெருமானை வணங்கி எம்பெருமானே இச்சிவலிங்கத்திற்கு அபிடேகம் செய்யவும், அடியேங்கள் ஸ்நானம் செய்து உய்யவும் இவ்விடம் கங்கை முதலிய நதிகளும் தடாகங்களும் இல்லையேயென்று விண்ணப்பம் செய்தார்கள். அதனால் இங்கே தாங்கள் ஓர் தீர்த்த நீறிலை உண்டாக்க வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்தார்கள்.

வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் எம்பெருமான் தமது சூலத்தை அந்தச் சிவலிங்கத்தின் தென்மேல் திசையில் நாட்ட அது பூமியையும் பாதாளத்தையும் கிழித்துக் கொண்டு சென்றபோது, தண்ணீர் கடல்போல் பொங்கி மேலே எழும்பியபோது எம்பெருமான் தனது திருக்கரத்தால் அந்த நீரை அடக்கி அருளினார். பின்னர், தமது சடாமுடியிலுள்ள கங்கா நீரை அதில் தெளித்துக் கலந்து புண்ணிய தீர்த்தமாக்கி, கணநாதர்களை எம்பெருமான் நோக்கி, "இத்தீர்த்தம் மற்றைய தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் புண்ணியமானது. ஆதி தீர்த்தமாகும். இது எல்லாத் தீர்த்தங்களிலும் மேலானது. இத்தீர்த்தத்தில் நீராடினவர் ஞானம், மங்கலம், முத்தி முதலியவற்றைப் பெறுவர். மானிடப் பிறவியின் பயனையும் அடைவர். இத்தீர்த்தத்தினால் எமக்கு அபிடேகம் முதலியன செய்வோர், பதினாறு பயனைப் பெறுவர்" என சிவபெருமான் திருவாய் மலர்ந்தார்.

பின்னர், நந்திதேவர் கணநாதர் முதலியோர் பொற்றாமரையில் நீராடிச் சோமசுந்தரமூர்த்தியை அந்தத் தீர்த்தத்தினால் விதிப்படி அபிடேகம் முதலியன செய்து பூசித்தனர். அதன் பின்னர் அவர்கள் விரும்பிய விரும்பிய வரங்களைப் பெற்றார்கள்.

பொற்றாமரை வாவியைப் பார்த்தாலே பாவம் நீங்கும், அதில் நீராடினால் விரும்பிய பொருட்களெல்லாம் கிடைக்கும். ஒருமுறை நீராடினால் போதும். உலகத்திலுள்ள தீர்த்தங்கள் நீராடிய பயன் கிடைக்கும்.

நெருப்பில் அறியாது தீண்டினால் அது சுடும் அதுபோல பொற்றாமரை வாவியில் அறியாது சிறிதளவு நீரில் தீண்டினால் மலநீக்கம் உண்டாகும். பொற்றாமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரக்கடவுளை வணங்கியோர் பரமுத்தியை அடைவர். சிரத்தையின்றி நீராடியவன் சுவர்க்கத்தை அடைவன். சிரத்தையோடு நீராடியவன் தேவர் முதலியோருக்கு அட்சதை கொடுத்த பயனடைவார்.. பொற்றாமரைக் கரையில் ஆகம விதிப்படி விரதம், பூசை, தவம், தானம், தருமம், ஓமம் முதலியன செய்து நீராடினால் கோடி பயன் பெறுவான்.

பொற்றாமரையில் பிறந்த நாளில் நீராடினால் பிறவித்துன்பம் நீங்கும். சித்திரை, கார்த்திகை, மாசி என்னும் மாதங்களில் ஸ்நானம் செய்து பிதிர்க்கடன் செய்தால் அவர்களின் பிறவித்துன்பம் நீங்கும்.

ஒவ்வொரு மாதங்களில் வரும் புண்ணிய நாட்களிலும் மாதப்பிறப்பு நாட்கள் ஆடி அமாவாசை போன்ற நாட்களில் நீராடினால் கோடி புண்ணியமுண்டு. புத்திரப் பேறில்லாத மலடி ஒருவருட காலம் பொற்றாமரையில் நீராடினால் புத்திர பாக்கியமுண்டு.

இத்தீர்த்தத்திற்கு வேறுபல பெயர்களுமுண்டு சிவபிரானால் கங்கை நீர் கலக்கப்பட்டமையால் சிவகங்கையென்றும் எல்லாத் தீர்த்தத்திலும் சிறப்புடமையால் உத்தம தீர்த்தமென்றும் பொற்றாமரை மலர்ந்தமையால் பொற்றாமரை வாவியென்றும் நான்கு புருடார்த்த உறுதிப்பொருள் தருதலால் தருமதீர்த்தம் அருத்த தீர்த்தம், சாமதீர்த்தம் மோஷதீர்த்தமெனவும் அழைக்கப்பெறும்.

## 4. மூர்த்தி விசேடம்

மகாமேருமலை, திருக்கைலாசமலை மந்தாரமலை, திருக்கேதாரம் காசி முதலிய இடங்களில் சிவதலங்களில் சிவலிங்கம் தோன்ற முன்னரே இக்கடம்ப மரத்தடியிலே சிவலிங்கம் தோன்றியது. இதன் பின்னரே மற்றைய தலங்களில் சிவலிங்கங்கள் தோன்றின. ஆதலால், ஞானவடிவாகிய இந்தச் சிவலிங்கம் மூலலிங்கம் எனப்படும். சிவபெருமான் தமது இச்சை வயத்தால் முப்பத்திரண்டு இலக்கணங்களும் அமைந்த திருமேனியுடையவராய் உமாதேவியாரோடும் அழகுசெய்து சாநித்தியராய் இருத்தலால் தேவர்கள் சோமசுந்தரக் கடவுளென்று திருநாமம் சூட்டினார்கள். இச்சோமசுந்தரக் கடவுள் உலகமெங்கும் வியாபித்துள்ளார் என்பதை ஒரு முறை பாண்டியன் கூலியாளான சுவாமிக்கு பிரம்பினால் அடித்தஅடி உலகமெங்கும் பட்டதல்லவா? ஆகையால் சம்மட்டி வடிவான இந்த லிங்கத்தைப் பூசித்த பலனைப் பெறுவார்கள். ஒரு மரத்தினடியில் ஊற்றிய நீரானது கிளைகள் முழுதும் செறிவது போல சோமசுந்தரமூர்த்தி சிவலிங்கத்தைப் பூசிப்பதால் உலகம் முழுதுமுள்ள சிவலிங்கத்தைப் பூசித்த பலனுண்டு.

உயிர்களிடத்தில் பெருங்கருணை கொண்டவர் சிவபெருமான். அதனால் மதுரை நகரிலே அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்தவர் அதனால் இந்தச் சிவலிங்கம் மூவுலகத்திலும் இல்லை இதற்கு ஈடுஇணையான உவமானப் பொருட்களும் இல்லை. மலைகளுள்ளே மகாமேருமலையும் தருக்களுள்ளே தேவதாருவும் யாகங்களுள்ளே அசுவமேதமும் சிறப்பாக இருப்பது போல சிவலிங்க மூர்த்திகளுள்ளே சோமசுந்தர மூர்த்தி லிங்கம் சிறந்ததாகும். இந்த லிங்கத்தை வழிபடுவோர் இம்மை, மறுமை வீடு மூன்றையும் பெறுவர்.

இந்தச் சோமசுந்தர இலிங்கத்தைத் தரிசித்தவர்களின் பாவமுழுதும் எல்லா வினைகள் பல விதமான நோய்கள் தானாகவே சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிடும். அதனால் இந்தச் சிவலிங்கத்தின் பெருமைகளை யாராலும் சொல்லால் சுருதியால் அளந்து சொல்ல முடியும், தன்னை வழிபட்டு கேட்ட கேட்டனவெல்லாம் மனமுவந்து அளிக்கும் சோமசுந்தரமூர்த்தியின் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைப் பார்ப்போம்.

கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.

தொடரும்....

# உயிருக்கு நலம் பயக்கும் பிரார்த்தனை

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

நாம் கடவுள் நினைப்புடன் என்றும் வாழவேண்டியவர்கள். அதற்கு ஒரு வழி பிரார்த்தனையாகும். இறைவனுடன் கொள்ளுகின்ற உறவுதான் பிரார்த்தனை என்றும், அதன் மூலம் எமது எண்ணங்களை இறைவன் பற்றியதாக மேல் நிலைக்கு உயர்த்துகிறோம் என்றும் பெரியோர் கூறியுள்ளனர். கடவுளைச் சிந்தித்தல், துதித்தல், நாமங்களை உச்சரித்தல், தோத்திரஞ்செய்தல் என்பவற்றில் ஈடுபடும் நேரம் தவப்பொழுது ஆக அமைகின்றது. அவனைப் பற்றிப் "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே;" என்கிறார் ஓர் அருளாளர்.

"பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். ஒவ்வொரு முறையும் கடவுளின் பெயரைத் திரும்பச் சொல்லும் போதும் கடவுளின் அருகே நீங்கள் வருகிறீர்கள்.." என்கிறார் காந்தியடிகள். மகாத்மாகாந்தி, பிரார்த்தனை மூலம் தான் மாபெரும் சாதனைகளையெல்லாம் நிலைநாட்டினார். நாம் கடவுளுக்கு அருகில் இருக்கும்போது எவ்வித அச்சமும் இருக்காது. அவருடன் அளவளாவி அவரைக் கேட்டு எல்லாக் காரியங்களிலும் இறங்கலாம். கடவுளை முன்வைத்து அவர் சம்மதத்துடன் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் நன்மையானவையாகவே விளங்கும்.

எமக்கு உடல் தேவைகள் உள்ளன. பசி, தாகம், கழிவகற்றல் என்பன உடனுக்குடன் நிறைவேற்றப்பட வேண்டிய உடல் தேவைகள். அவற்றைப் பின்பு, பிறகு என்று ஒத்திவைக்காமல் அவ்வப்போது நிறைவேற்றுவதில் ஆர்வமாக உள்ளோம். கொஞ்சம் தாமதமானாலும் உபாதை தாங்க முடியாமல் தவிக்கிறோம். நிறைவேற்றத் துடிக்கிறோம். உடல் தேவைகள் போன்றே, ஆன்மாவுக்கும் அதாவது உயிருக்கும் தேவைகள் உண்டு. உயிரின் தேவைகளை நாம் பெரும்பாலும் அலட்சியம் பண்ணி வருகிறோம். பின்பு, பிறகு என்று ஒத்திவைத்துக் கொள்கிறோம். வயது முதுமையானதும் ஆன்மாவைப்பற்றி யோசிப்போம், அதன் தேவைகளை நிறைவு செய்ய அப்போதுதான் அவகாசம் கிடைக்கும் என்கிறோம் எம்மில்பலர். ஆனால் முதுமையில் வேறு சோலிகள், அலுவல்கள் வந்து விடுகின்றன. ஆன்மாவின் தேவைகள் நிறைவேற்றப்படாமலே போய்விடுகின்றன. பின்பு பிறகு என்பதும் இல்லையென்பதற்கு அடையாளம் என்று நம் ஆன்றோர்கள் சும்மாவா சொல்லி வைத்தார்கள்.

எமது உடல் தேவைகள், உலகியல் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி விடுவதில் எமக்குள்ள தவிப்பும் தாகமும், துடிப்பும் பிடிப்பும் எமது ஆன்மாவின் தேவைகளையும் நிறைவேற்றுவதில் இருக்குமாயின் எத்துணை நல்லதாகவும் நன்மையாகவும் இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உடலின் தேவை போன்றுதான் உயிரின் தேவையையும் உடனுக்குடன் நிறைவு செய்யவேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். உடல் தேவையை நிறைவேற்றாவிட்டால் உடலுக்கு உபாதை வருத்தம் ஏற்படுகின்றன. அது போலத்தான் உயிரின் ஆன்மாவின் தேவைகளையும் நிறைவேற்றாவிட்டால் உயிருக்கு உபாதையும் வருத்தமும் ஏற்படுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். உடலை வருத்தக்கூடாது என்று நினைக்கும் நாம் எமது உயிரை வருத்தலாமா?

உடலைப் போஷிப்பது போன்று உயிரையும் போஷிக்க வேண்டியது அவசியம். காந்தியடிகள் குறிப்பிட்டது போல பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். அத்தேவையை நிறைவு செய்தல் ஒருவரின் இளமை தொட்டு மரணபரியந்தம் தொடர்ந்து நடைபெறவேண்டும். இப்போது என்ன அவசரம் பின்னர், பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திவைக்கக்கூடிய விஷயம் அன்று. உயிர் வாழ்ந்தால்தான் உடல் வாழும் உடலை மட்டும் கவனித்துக்கொண்டு உயிரைக் கவனிக்காது உதாசீனஞ் செய்வது அறிவீனம் மட்டுமன்று மடமையுமாகும்.

உயிரின் நலனுக்கும் காப்பிற்கும் கடவுளின் திருவருளை வேண்டிப் பிரார்த்தனை செய்யவேண்டும். உயிர் நலம் பெற்றால், பாதுகாப்புப் பெற்றால், அதனோடு சேர்ந்த உடலும் நலம் பெறும். பாதுகாப்பும் பெறும். பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுகின்ற தல்லவா? அது போன்று உயிர் நலம் அடையும் போது உடலும் நலம் பெறுகின்றது. எனவே உலகியல் சார்ந்த நன்மைகளை அடைவதற்கும் கூடப் பிரார்த்தனை அவசியம். உலகியல் விஷயங்களை கடவுளை விசாரித்துச் செய்வதுதான் நல்லது. புனித நூல்கள், அருளாளர்கள், பெரியோர்கள் மூலமாகக் கடவுள் தன் கருத்தை உணர்த்திக் கொண்டிருக்கிறார். மனச்சாட்சி மூலம் உள்ளுணர்வாக கடவுள் நமக்கு நல்லது கெட்டது உணர்த்துகிறார். கேட்டு நடந்தால் வாழ்வில் ஒரு பொல்லாப்பும் இல்லை இவை யாவற்றிற்கும் அடிப்படையாகப் பிரார்த்தனை மூலம் எம்மைத் தூய்மைப்படுத்தி பக்குவப்படுத்தி கடவுளோடு தொடர்பு கொள்ளுந் திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

✻✻✻ ✻✻✻ ✻✻✻

**நாவலர் பெருமானின் நீதி வாக்கியங்கள்:**

✻ சபைக்கு அஞ்சி நடுங்கும் வித்துவான்களிடத்தில் கல்வியும் சபைக்கு அஞ்சாத மூடர்களிடத்தில் ஆரவாரச் சொற்களும் உண்டாதலினும் உண்டாகாமையே நன்று.

✻ உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே உன்னைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழியில் நீரை வார்த்தல் போலும்.

✻ செல்வம் கல்லாதவரைக் கெடுக்கையாலும், வறுமை கற்றோரைக் கெடாமையாலும் கல்லாரிடத்து உண்டாகிய செல்வம், கற்றவரிடத்து உண்டாகிய வறுமையினும் மிகத்துன்பஞ் செய்வதாம்.

✻ செல்வம் உள்ள மூடரினும், வறுமை உள்ள வித்துவான்களே எங்கும் நன்கு மதிக்கப்படுவார்கள்.

✻ செல்வம் அழிவு உள்ளது. ஆதலால், அதனால் வரும் பெருமையும் அழிவுள்ளது. கல்வி அழிவில்லாதது, ஆதலால் அதனால் வரும் பெருமையும் அழிவில்லாதது.

✻ உடம்போடு அழிதலால் பயன்படாச் சாதியுயர்ச்சி இலராயினும், உயிரோடு செல்லுதலாற் பயன்படும் கல்வியுயர்ச்சி உடையவரே மேன்மக்கள்.

✻ கல்வியறிவால் ஆகிய மூப்பே மூப்பு. ஆதலால், அதனை உடையவர்களே யாவராலும் வணங்கப்படத்தக்கவர்கள்.

✻ அருட்செல்வமே அறிவுடையோரிடத்து மாத்திரம் உளதாகி எவ்வுயிர்களாலும் நன்கு மதிக்கப்படும் பெருஞ்செல்வம்.

தொகுப்பு: **செல்வி கி.துர்க்கா,** மானிப்பாய்.

# சதாபிஷேகம் காணும் இசை மேதை சாவகச்சேரி பஞ்சாபிகேஷன்
# 65 வருடங்களாக இசை மழை

**இணுவையூர் சிவ-பத-நவேந்திரன்**

தமிழரை அடையாளம் காட்டுவது எமது கர்நாடக இசை, அதிலும் குறிப்பாக நாதஸ்வரம், தவில் என்பன. இன்னுமொரு சிறப்பம்சம் தமிழர் விழா எதுவாகவிருப்பினும் நாதஸ்வர தவில் கச்சேரி விழாவின் ஒரு பங்கமாக அமைவது.

சில அபூர்வ மனிதர்களின் தனித் தன்மையில் அவர்கள் பிறக்கும் ஊரிற்குப் பெருமை. அதே போல், சிறப்பம்சம் பொருந்திய ஊரால், அங்கு பிறப்போர்க்குப் பெருமை. இதில் சாவகச்சேரி பஞ்சாபிகேஷன் முன்னைய வரைவிலக்கணத்தில் அடங்குபவர் என்றால் அதற்கு மாற்றுக்கருத்து இருக்க முடியாது. சாவகச்சேரி என்றதும் எமக்கெல்லாம் உடனே ஞாபகத்திற்கு வருவது அழகான குடுமியுடன் தோன்றும் M.பஞ்சாபிகேஷன் அவர்களே. 1960-1970 ஆண்டுகளிற்கு முன்னர், இசைவேளாளர்களை அடையாளம் காட்டுவது குடுமி, சொருகு கொண்டை, கடுக்கன் என்பன. பின்னர் இவை அற்றுப் போனாலும், இன்றும் பழமை காத்து வருவர் இந்தப் பெருமகனார். இசை வேளாளர்களுக்கு இருக்கும் இன்னுமொரு அடையாளம் தாம்பூலம் (வெற்றிலை) போடுவது இதற்கு மட்டும் இவர் விதிவிலக்கு. இசைக்கலைஞர்களுக்கு சாபக்கேடாய் இருப்பது குடிப்பழக்கம். இப்பழக்கத்தால் பல இசைமேதைகளை நாம் இழந்திருக்கிறோம் இதற்கும் இவர் விதிவிலக்கு.

1970களின் ஆரம்ப காலப்பகுதியில் "பாரி", "திமிலி" என்ற நாதஸ்வரப்பாகுபாடு எழுந்து, இசைவேளாளர் பரம்பரையையே ஆட்டம் காணவைத்தது; உறவுகளைப் பிரித்தது; சகோதரர்களாகக் கூட்டுக்கச்சேரி செய்தவர்களிடையே பகைமை காண வைத்தது. பாரியே சிறந்தது. திமிரியே சிறந்தது என இக்கலைப்பரம்பரை இரண்டு பட்டபோது காலா காலாமாக பழக்கத்தில் இருந்த, பாரியையே தொடர்ந்து வாசித்து பெருமைகாத்த பண்பாளர் இவர். பாரி என்பது இரண்டரைக் கட்டைக் கருதி கொண்ட நீண்ட குழல், திமிரி என்பது ஒரு கட்டைச் சுருதி கொண்ட சினக்குழல். இக்காலப் பகுதியில் வந்த வகுப்பு வாதத்தில் அகப்படாமல் தனித்துவம் காத்ததிலும் இவர் விதிவிலக்கு.

தவில் மாமேதை லயஞான குபேரபூபதி இணுவையூர் தட்சணாமூர்த்தி இந்தியாவில் சிலகாலம் தங்கி பின்னர் தனது இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் M.பஞ்சாபிகேஷனுக்கு மட்டுமே தவில் வாசிப்பேன் என்ற பெருமைக் குச் சொந்தக்காரனாகி மற்றைய கலைஞருள் மீண்டும் விதிவிலக்காகியவர் இவர்.

தவில், நாதஸ்வர வித்துவான்கள் தமது இளமைக் காலத்தில் விற்பனர்களாகி, நடுத்தர வயதில் கால அனுபவத்தால் புகழின் உச்சிக்குப் போய், பின்னர் வயது போனபின் கோவில் தவில், நாதஸ்வரர்களாக மாறுவது காலத்தின் நியதி. இதிலும் M.பஞ்சாபிகேஷன் விதிவிலக்கு. பல்லுப் போனால் சொல்லுப் போகும் என்பது பழமொழி. இன்னும் முன்வாயில் ஒரு பல்லுடன், குழலினிமை குன்றாது, தொடர்ந்து 65 வருடங்களாக இசைமழை பொழிந்து வருவதிலும் இவர் விதிவிலக்கு.

ஒட்டு மொத்தத்தில் விதிவிலக்கு என்ற தமிழ்ச் சொல்லிற்கு தமிழகராதியில் M.பஞ்சாபிகேஷன் என்று போடுவதற்கு எல்லா விதத்தில் தனித்துவம் காத்து விதி விலக்காக இருப்பவர்.

இந்தியாவில் இருந்து வந்த பல புகழ்பூத்த கலைஞர்களோடு, குறிப்பாக காரைக்குறிச்சி அருணாசலம் போன்றவர்களுடன் சரிநிகராக நாதஸ்வரம் வாசித்த பெருமை இவருக்குண்டு.

போராட்ட காலத்தில் விழைந்த அனர்த்தங்களில் சாவகச்சேரி முற்றாகப் பாதிக்கப்பட்டபோது தனது மூத்தமகன் M.P. நாகேந்திரன் அவர்களோடு தலைநகரிற்கு இடம் பெயர்ந்தது காலத்தின் நியதி. யாழ் இசை விரும்பிகளிற்கும், இவரிடம் பாடாந்தரம் கற்கவேண்டிய இளம் இசை வேளாளர் பரம்பரைக்கும் ஒரு இழப்பே.

இவர் பெற்ற பதக்கங்களும், பட்டங்களும், பாராட்டுதல்களும் எண்ணிலடங் காதவை. குறிப்பாக திருக்கேதீஸ்வர ஆலயத்தில் 50 ஆண்டுகட்கு மேலாக ஆஸ்தான வித்துவானாக இருந்த காலத்தில் வழங்கப்பட்ட "இசை வள்ளல்" "நாதஸ்வர கலாமணி" என்பவையும் முன்னைநாள் கல்வி அமைச்சர் பதியுதீன் முகமட் காலத்தில் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட "நாதஸ்வர கான வாரிதி" என்ற பட்டமும் இராசதுரை அமைச்சராக இருந்த காலத்தில் இந்துகலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்ட "ஸ்வரஞான திலகம்" என்ற பட்டமும், இலங்கை அரசினால் அதியுயர் பட்டமான "கலாபூஷணம்" என்ற விருதும், அகில இலங்கை கம்பன் கழகத்தினால் வழங்கப்பட்ட "இசைப் பேரறிஞர்" என்ற விருதும் குறிப்பிடத்தக்கன.

அந்தக்காலத்தில் பிரபல்யமாக இருந்த சாவகச்சேரி நாதஸ்வர வித்துவான் முருகப்பா சின்னப்பிள்ளை தம்பதியினருக்கு அருமைமகனாக 1924ஆம் ஆண்டு ஜுலை 1ம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்ப பாடாந்தரத்தை சோடி நாதஸ்வர சோடித்தவில் என்ற புரட்சிகளை செய்த ஒரு நாதஸ்வரத்திற்கு ஒரு தவில் என்றிருந்த காலமிது) பிரபல நாதஸ்வரச் சகோதரர்கள் சண்முகபிள்ளை, அப்புலிங்கம்பிள்ளை அவர்களிடம் பெற்றார். பின்னர் புகழ்பூத்த நாதஸ்வர மேதை P.S. ஆறுமுகத்தின் தமையனார் P. S. கந்தசாமிப்பிள்ளையிடமும் பெற்று மேலதிக பயிற்சிக்காக இந்தியா சென்று நாதஸ்வரத்திற்கு வரைவிலக்கணம் அமைத்த திருவாவடுதுறை இராஜரட்ணம் பிள்ளையின் மருமகனார் தக்காய் நடராஜசுந்தரம்பிள்ளையிடமும், ஐயம்பேட்டை வேணுகோபால்பிள்ளையிடமும் பெற்று மெருகேற்றிக் கொண்டார்.

தனது பதினான்காவது வயதில் பருத்தித்துறை சித்தி விநாயகர் ஆலயத்தின் தனது முதற் கச்சேரியைத் தொடங்கிய இவர், 65 வருடங்களாக தொடர்ந்து ஆற்றிவரும் இசைத் தொண்டு பிரமிக்க வைக்கிறது.

இவரது சதாபிஷேக பிறந்த நாள் விழாவை பிள்ளைகள் அனைவரும் ஒன்றுகூடி ஜுன் 25ம் திகதி திருக்கடவூர் அபிராமி ஆலயத்திலும், பிறந்த நாளான ஜுலை 1ம் திகதி தங்கள் குடும்ப குல ரிதஸ்வமான சாவகச்சேரி சங்கத்தானை இராக்கச்சி அம்மன் ஆலயத்திலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். இலங்கைத் தமிழர்களின் பொதுச் சொத்தான இவர், மேலும் பல்லாண்டு காலம் தொடர்ந்து இசைப்பணி தொடர நாம் எல்லோரும் வாழ்த்தி நிற்போம்.

**உங்கள் அபிமான "அருள்ஒளி" கிடைக்கும் இடங்கள்**

**அலுவலகம்:**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,**
**கோவில் வீதி,**
**நல்லூர்.**

ஒளிருபத்தில் சக்தி வழிபாடு

# திருவிளக்குப்பூஜை

'பிரதிஷ்டா வித்தகர்'

**சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்** மட்டுவில்.

கடவுள் ஒளிமயமானவர் என்பது நமது வேதங்களில் காணப்படும் உண்மை. வேதநெறியில் வாழையடி வாழையெனத் தோன்றிய அருளாளர்களும் ஆண்டவனை அருள்ஒளி வடிவாகவே கண்டனர். "அருட்சோதி தெய்வம், என்னை ஆண்டுகொண்ட தெய்வம்" என வள்ளலாரும், "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியே" என்று மணிவாசகரும் "எரிகின்ற இள ஞாயிறன்ன மேனி", "ஒளிவளர் விளக்கே", "ஒளிச்சுடரான மூர்த்தி" என்று ஆன்றோரும் இறைவனைப் பற்றி அருளியிருக்கும் அருள்மொழிகள், இந்த உண்மையை நமக்குத் தெளிவுபடுத்தும்.

எனவே ஒளிவடிவான இறைவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் சக்தியை விளக்கினிலே தீபதேவியாக, தீப லக்ஷ்மியாக, ஜோதிலக்ஷ்மியாக போற்றித் துதித்து வழிபடுதல் நமது பாரம்பரிய வழக்காகும். ஆலயங்களில் நித்ய நைமித்தியங்களில் முதலில் நடைபெறுவது தீபபூஜை. வீடுகளில் நாள்தோறும் இல்லத்தரசிகள்; கன்னிகைகள்; சுமங்கலிப் பெண்கள் விளக்கேற்றி வழிபடுவதும் ஆலயங்களில் பூரணை போன்ற சுபதினங்களில் திருவிளக்குப்பூஜை நடைபெறுதலும் சிறப்பான அம்சமாகும். நமது சாதாரண புலனறிவுக்குப் புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பால் அருட்பெருஞ் சுடராய் நின்று எங்கும் அருள்பாலிக்கும் தெய்வத்தின் திருவுருவை தீபத்தில் நிறுத்தி வழிபடுதலே திருவிளக்கு வழிபாடாகும்.

கடவுள் ஒளிவடிவினர் என்பதை நமக்கு நினைவூட்டுவதே திருக்கார்த்திகை திருநாள். இல்லக விளக்கான பெண்மணிகளுக்கு இவ்விழா முக்கியமானது. இதனைத் "தையலாள் கொண்டாடும் தொல்கார்த்திகைத் திருநாள்" என்று ஞானசம்பந்தப் பெருமான் கூறியுள்ளார். ஆகவே திருவிளக்கு வழிபாடு பெண்களுக்கு உரித்தான வழிபாடாகும். இருளாகிய துன்பம் நீங்கி அருளாகிய இன்பம் நிறைந்திட திருவிளக்கு வழிபாடு செய்கிறோம். திருவிளக்கு வழிபாடு செய்வதால் நம் வாழ்வில் தூய்மையும் தெய்வத்தன்மையும் பெருகும். சஞ்சலமும் வறுமையும் நீங்கும் சாந்தியும் நல்வளமும் நிறையும். பெண்கள் தினந்தோறும் தங்கள் இல்லங்களில் அந்திவேளையில் திருவிளக்கேற்றி வழிபட்டால் அஷ்டலக்ஷ்மிகளும் அங்கே குடிகொள்வர். நமக்கு வேண்டிய எல்லா நலன்களையும் அருளுவார்கள். திருவிளக்கு வழிபாடு தினந்தோறும் நடைபெறும் இல்லங்களில் தெய்வ சாந்நித்யம் நிலவுவதால் பேய், பிசாசு, பில்லி, சூனியம் என்பன அணுகாது.

**திருவிளக்கின் அம்சம்:** பூஜைக்கு ஏற்றப்படும் தீபம் பித்தளை, செம்பு, வெள்ளி என்னும் உலோகங்களில் ஒன்றாக இருக்கவேண்டும். ஐந்துசுடர் இருக்கத்தக்கதாக, ஐந்து அகல்களை உடையதாய், திருமுடியுடையதாகவும் இருத்தல் வேண்டும். தீபமேற்றும் திசை கிழக்கு அல்லது வடக்காக இருக்க வேண்டும். ஒருதிரி ஏற்றுதல் கூடாது. மூன்று அல்லது ஐந்து திரிகள் ஏற்றுவது சிறந்தது. தீபத்தின் அம்சம் பராசக்தியைக் குறிக்கும். எரியும் சுடர் மஹாலக்ஷமியையும், ஒளியினின்றும் வெளிப்படும் சூடு துர்க்கையையும் குறிப்பதால் திருவிளக்கு மகாசக்தி வடிவமாகின்றது.

**இல்லத்தில் விளக்கேற்றி வழிபடல்:** தினந்தோறும் காலை, மாலை வேளைகளில் கன்னிகைகளும், சுமங்கலிகளும் நீராடி ஆசார சீலர்களாய் நெற்றியில் குங்குமத் திலகமிட்டு பூஜையறையிற் சென்று விளக்கேற்றுமிடத்தில் நீர் தெளித்துக் கோலமிட்டு திருவிளக்கை வைத்து புஷ்பம், குங்குமம் என்பவற்றால் அலங்கரித்து "தீபதேவியே! அருளொளி கொடுப்பாய்" என்று நினைந்து விளக்கை ஏற்றவும். பின்பு பூஜையறையிலுள்ள விநாயகர் படத்தினை வணங்கித் திருவிளக்கை தீபலக்ஷ்மியாக நினைத்துப் பூவினால் பூஜித்து மஹாலக்ஷ்மி படத்தையும் ஏனைய படங்கள் இருப்பின் அவற்றையும் வந்தித்து மஹாலக்ஷ்மியே தேவீ, இத்திருவிளக்கிலும் இப்படத்தின் ரூபத்திலும் வெளிவந்து எமக்கு சகல நலன்களையும் தருவாய்! என்று வேண்டிப் போற்றிப் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யவும். பூஜையின் நிறைவில் விரும்பிய ஸ்தோத்திரங்களைச் சொல்லி வழிபடலாம். இறுதியில் விளக்கின் பாதத்திலுள்ள பூ ஒன்றை எடுத்து மஹாலக்ஷ்மியின் பிரசாதமாகக் கண்களில் ஒற்றித் தலையில் சூடிக்கொண்டு நெற்றியில் குங்குமப் பொட்டிட்டுக் கொள்ளல் வேண்டும். இப்படித் தினந்தோறும் வழிபடுவதால் வேண்டிய நலன்கள் யாவும் அம்பிகை தந்தருளுவாள். இல்லத்திலும் தெய்வீகமணம் வீசும்.

**ஆலயத்தில் செய்யும் திருவிளக்குப் பூஜை:** வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, பூரணைத் திருநாள், ஆடிப்பூரம், சோமவாரம், மாசிமகம், நவராத்திரி காலம் ஆகிய தினங்களில் தீபபூஜை செய்யலாம்.

**திருவிளக்குப் பூஜைக்குத் தேவையானவை:** திருவிளக்கு, வாழையிலை, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், எலுமிச்சம்பழம், குங்குமம், சந்தனம், ஊதுபத்தி, கர்ப்பூரம், தேய்காயெண்ணெய், திரி, செம்பு, மஞ்சள், மஞ்சள்மா, தட்டு, பூ, அறுகம்புல்.

**பூஜைக்குத் தயார் செய்தல்:** திருவிளக்குப் பூஜை செய்யுமிடத்தைத் துப்பரவு செய்து நீர் தெளித்துக் கோலமிட்டு அதன் மேல் வாழையிலையையோ அல்லது விளக்கு வைக்குந் தட்டையோ வைத்து அதன்மேல் நன்றாகத் தேய்த்துச் சுத்தம் செய்த விளக்கை வைக்கவேண்டும். பூச்சரம், சந்தனம், குங்குமம் என்பவற்றால் திருவிளக்கை அலங்கரித்துக் கொள்ளல் வேண்டும். திருவிளக்கின் பக்கத்தில் (வலது கைப்பக்கம்) மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல், பூ என்பன சாத்தி அலங்கரித்துக் கொள்ளவும். திருவிளக்கின் முன்பாக அல்லது வலது பக்கத்தில் நிவேதனத்திற்குரிய பொருட்களை வைத்துக் கொள்ளல் வேண்டும். செம்பில் சுத்தமான நீர் எடுத்து இரு பூக்களைப் போட்டு வைக்கவும். பூஜைக்கு எடுக்கத்தக்கதாகப் பூக்களையும் குங்குமத்தினையும் பக்கத்தில் வைத்துக்கொள்ளவும். பூஜை தொடங்குமுன் ஒருமுறை இவைகள் யாவும் சரியாக இருக்கின்றனவா என அவதானித்துப் பூஜைக்குத் தயாராகவேண்டும்.

**திருவிளக்குப் பூஜை:** திருவிளக்குப்பூஜை செய்யும் ஆலயத்தில் சிவாசாரியர் கூறும் ஒழுங்கின்படி சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். பின் தேவியை திருவிளக்கில் எழுந்தருளிவர நினைத்துக் கொண்டு "ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதகே சரண்யே த்ரியம்பகே கௌரீ நாராயணி நமோஸ்துதே" என்னும் மந்திரத்தைச் சொல்லி விளக்கேற்றுதல் வேண்டும்.

**அடுத்துப் பிள்ளையார் பூஜை:** மஞ்சள்மாவில் தயார் செய்திருக்கும் பிள்ளையாருக்குப் பூ எடுத்து பிள்ளையாரே இம்மஞ்சள் ரூபத்தில் எழுந்தருளியிருப்பதாக நினைத்து இத் தீபபூஜைக்கு இடையூறு நிகழாது காத்தருளுமாறு வேண்டிப் பூவைச்சாத்தி வணங்கவும். பின் பிள்ளையாரின் திருநாமங்களை உச்சரித்து பூ, அறுகம்புல் என்பவற்றினால் பூஜித்து "கஜானனம் பூதகணாதி சேவிதம் கபித்தஜம்பூ பலசார பட்சிதம் உமாசுதம் சோக விநாச காரணம் நமாமிவிக்னேஸ்வர பாத பங்கஜம்" என்னும் மந்திரத்தைச் சொல்லி வழிபடவும்.

பின்னர் சிவாசார்யர் சொல்லும் மந்திரங்களுடன் மனதில் "மஹாலக்ஷ்மியே நாம் செய்யும் இத் தீபபூஜையில் திருவிளக்கில் வந்து எழுந்தருளி எமது பூஜையையேற்றுத் திருவருள் பாலிக்கவேண்டும்" என்று நினைத்து விளக்குத்தாளில் பூக்களைப் போட்டு வணங்கவும். அதன்பின் சிவாசார்யர் உச்சரிக்கும் நாமங்களுக்கு பூவினாலும், இடையிடையே குங்குமத்தினாலும் தீபத்தின் பாதத்திலிட்டு அர்ச்சிக்கவும். அர்ச்சனை, வழிபாடு முடிந்ததும் செம்பிலுள்ள தீர்த்தத்தினை பூவினால் தொட்டு வெற்றிலை, பழங்களை நிவேதித்து மஹாலக்ஷ்மியே இச்சிறு நிவேதனங்களை ஏற்றருள்வாயாக என்று வேண்டி பூஜை முடிந்ததும் "ஸர்வ மங்கள மாங்கல்யே" எனும் மந்திரத்தை 3 தரம் சொல்லி வழிபட்டு மஹாலக்ஷ்மி அஷ்டகம் போன்ற ஸ்தோத்திரங்களைப் படித்து பஞ்சாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பின்னர் சிவாசார்யருக்கு தட்சணை கொடுத்து, பூஜைப் பிரசாதம் பெற்று, பூஜித்த குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு தீபத்தை அணையாது கையிலெடுத்து ஆலயத்தை வலம்வந்து பூஜித்த இடத்தில் வைத்து பூவினால் விளக்கைத் தணித்து தீபபூஜையை நிறைவு செய்யலாம். இவ்வொழுங்கின்படி தீபபூஜை செய்துவரின் சகல செல்வமும், மஹாலக்ஷ்மி கடாட்சமும் கிடைக்கப்பெறும். வாழ்வு ஒளி பெறும்.

தீப வழிபாடு முடிந்ததும் விளக்குச் சுடர்மீது பூக்களை வைத்து மெதுவாக அணைக்க வேண்டும். வீசி அணைத்தலும், கூடுபற்றி எரியவிடலும் ஆகாது. இவ்விதம் ஒழுங்காகத் தீபபூஜைசெய்கின்ற கன்னிகைகள், சுமங்கலிப்பெண்கள் ஆகியோருக்கு விரும்பிய வாழ்வு கிட்டும். சுகவாழ்வு நீடிக்கும். மாங்கல்யபலமுண்டாகும். வாழ்க்கையில் தெய்வ ஒளி பெருகி சகல செல்வமுமுண்டாகும். **நன்றி: நவராத்திரிமலர்**

**கல்வயல் இந்து இளைஞர் மன்றம்**

## முக்கண்ணன்



நெற்றிக்கண்ணன் என்றும்; இரு கண்களின் மேல் ஒரு கண் உடையவன் என்றும் சிவபெருமானைப் போற்றுகிறார்கள். நெற்றிக்கண்மேல் இருப்பது ஊனக்கண் அல்ல; அது ஞானக்கண். புலனடக்கம் பழகி முறையாகப் பிரம்மச்சரிய விரதத்தை அனுஷ்டிப்பவனுக்கு ஞானக்கண் தானே உண்டாகிறது. முழுமுதல் பொருளாகிய சிவன் முற்றிலும் ஞானசொரூபம் எனவே அவரை முக்கண்ணன் என்கிறோம். நெற்றிக்கண்ணைத் திறந்து காமனை எரித்துக் காமத்தை அடக்கிய கடவுளாக அவரை வழிபடுகிறோம். ஞானக் கண்ணைப் பெறுவோர்க்குக் காமம் கிடையாது. எல்லாம் தெய்வ சொரூபமாகத் தென்படுவதால் சிவஞானத்தோடு கூடிய பக்திதான் மிஞ்சுகிறது.

**- சுவாமி சித்பவானந்தர்**

# சத்தியநாயனார்

திரு. க.சிவசங்கரநாதன் அவர்கள்
சமாதான நீதிபதி,
சரசாலை.

சோழநாட்டில் வரிஞ்சையூர் என்பது வேளாண்செல்வர் மலிந்தபரி. அந்தக்குலத்தில் சத்தியார் என்பவர் தோன்றினார். சிவபிரானுடைய திருவடித்தொண்டை வாழ்க்கையின் பெரும் பயனாக எண்ணி வாழ்ந்தார் அவர். அவருடைய இயல்பான பெயர் இன்னதென்று தெரியவில்லை. அவர் இறைவனுடைய அன்பர்களிடத்தில் மிக்க ஈடுபாடு உடையவராக இருந்தார். நடமாடும் தெய்வமாக அவர்களை எண்ணி வழிபட்டார். அடியாரிடம் உலகம் முழுவதும் மதிப்பு வைத்து ஒழுகவேண்டும் என்பது அவரது பெருவிருப்பம் அடியாரைக் கண்டால் எழுந்து வணங்கி உபசரிக்காதவர்களை விலங்கெனவே எண்ணினார். அடியவர்களை யாரேனும் இகழ்ந்தால் அதைக் கேட்டுக்கொண்டு சும்மா இருக்கமாட்டார். அவர்களுக்கு தக்க தண்டனை அளிக்கத் துடிப்பார். நாளடைவில் அவர் சினம் மிக்கது. யாரேனும் அடியார்களை இகழ்ந்தால் உடனே ஒரு கிடுக்கியைக் கொண்டு இகழ்ந்தவர்களுடைய நாவைப் பற்றி இழுத்து வாளால் அரியத்தொடங்கினார். அவர் மிடுக்கும் உடல் வலிமையும் உடையவராதலினால் இவ்வாறு செய்ய முடிந்தது இந்த வலிய சத்தியை உடையவராக இருந்ததனால்தான் அவருக்குச் சத்தியார் என்ற பெயர் உண்டாயிற்று.

அடியவர்களை இகழ்பவர் யாராயினும் சத்தியார் வருகிறாரென்றால் அஞ்சி நடுங்குவர். இதனால் மனம் போனபடியெல்லாம் அடியவர்களைப் பழிக்கும் செயல் குறைந்து வந்தது எங்கிருந்தாவது சத்தியார் வந்து கேட்டுவிட்டால் என் செய்வது என்று அஞ்சி நடுங்கினார்கள். அடியாரைப் பழிக்கும் இழிதகையையுடையவர்கள். தீங்கு செய்வாரைத் தண்டிப்பது அறம் பயிருக்குக் களையெடுப்பது போன்றது அது. பிறர் தீங்கு செய்வதைக் கண்டதும் அதைக் கண்டிக்க பலருக்கு வாய் எழாது. நமக்கு ஏன் அந்தப் பொல்லாப்பு என்று ஒதுங்கி விடுபவர்களே பலர் அன்றும் இன்றும் உள்ளனர். அவ்வாறு இன்றி ஏது வரினும் வரட்டும் என்று துணிந்து தீயவை புரிபவர்களைத் தண்டிக்கும் வீரம் எல்லோருக்கும் வருவதில்லை சத்தியார் அந்த வீரம் பெற்றவர் மறக்க முடியாத பெருந்தகை.

சிவனுக்கு அபசாரம் செய்வதைக் காட்டிலும் சிவனடியாருக்கு அபசாரம் செய்வதனால் மிக்க துன்பம் நேரும். ஆதலின் சிவனடியாருக்கு யாரும் தீங்கு செய்யாமல் பாதுகாப்பது வீரம் உடையவர்கள் கடமை. இதை மேற்கொண்டு வாழ்ந்த சத்தியார் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக எண்ணும் பெருமையைப் பெற்றார். இன்றைய சூழ்நிலையில் அறுபத்துமூன்று நாயன்மார்களைப் பற்றி சைவமக்கள் சிந்தித்து எண்ணி மக்கள் தேவைகளை அறிந்து உதவி புரிவது சாலச்சிறந்த விடயமாகும்.

ஆறுபடைவீடு கொண்ட
திருமுருகா




பதிப்பகம், நல்லூர்.